
Saturday மெயில்
සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin
03-07-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=


பொதுசன நூலகம்
நூலகத்துறைப் பிரிவு
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# ஓய்வு பெற முடியாத நிலையில் கலைஞர்!





## திகதி குறிக்குமாறு செய்தியாளரைக் கேட்டு நழுவிச் சென்றதன் அர்த்தம் என்ன?



அடுத்த பக்கம் புரட்டுங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper at G.P.O.

கடந்தவாரம் தமிழகத்தின் கோவையில் கோலாகலமாக நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மகாநாட்டின் இறுதியில் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் அரசியல் ஓய்வு குறித்து செய்தியாளர்கள் கேள்வியெழுப்பியதற்கு வேறுயாருமல்ல, அவரே முற்றுமுழுதாகப் பொறுப்பு.

ஏனென்றால் தமிழ்ச் செம்மொழி மகாநாட்டிற்குப் பிறகு கலைஞர் அரசியலில் இருந்து ஓய்வுபெறக்கூடும் என்ற ஊகங்கள் எழக்கூடியதாக அவரே கருத்துகளை வெளியிட்டு வந்திருக்கிறார்.

கடந்த பெப்ரவரி நடுப்பகுதியில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சங்கத் தமிழ்ப் பேரவை ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் தனக்கு செய்யப்பட்ட கௌரவங்களை ஏற்றுக்கொண்டு இறுதியில் பதிலளித்து உரையாற்றிய கருணாநிதி; 'அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதென்பது எனது தனிப்பட்ட விவகாரம். எப்போது, எங்கே இராஜிநாமா கடிதங்களைச் சமர்ப்பிப்பது என்பதை நான் மாத்திரமே தீர்மானிக்க முடியும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் பாராட்டு விழாவில் இந்திய மத்திய அமைச்சர்களான பாரூக் அப்துல்லா, எஸ்.எம்.கிருஷ்ணா போன்ற முக்கிய அரசியல் தலைவர்களும் கலந்துகொண்டனர்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மகாநாட்டிற்குப் பின்னரும் முதலமைச்சர் பதவியில் தொடரும் எண்ணம் கலைஞருக்கு இருந்ததை அன்றையதினம் அவரது உரை தெளிவாக உணர்த்தியது. 'சங்கத் தமிழ்ப் பேரவை எனக்கு எடுத்திருக்கும் இந்த விழா என்னை மகிழ்விக்கும் நோக்கத்தையோ அல்லது அரசியலில் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக எனக்கு பிரியாவிடை அளிக்கும் நோக்கத்தையோ கொண்டதல்ல. எப்போது, எங்கே, எத்தகைய சூழ்நிலைகளில் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதென்பதைத் தீர்மானிப்பது எனது தனிப்பட்ட விவகாரம். இந்தப் பாராட்டு விழா நான் பணியாற்றும் வேகத்தை மேலும் அதிகரிக்கவே செய்யும். அறிஞர் அண்ணாவின் கொள்கை, கோட்பாடுகளின் வழியிலான எனது பயணம் தொடரும். இந்தப் பயணத்தில் நான் மாத்திரம் விரைந்து செல்வது போதுமானதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஏனைய சிரேஷ்ட தலைவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்ட சபை உறுப்பினர்கள் உட்பட சகலரும் விரைந்து செயற்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்' என்று கலைஞர் தமதுரையில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.



அருந்ததியர் சங்கங்களினால் வள்ளுவர் கோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாராட்டு விழாவொன்றில் கலைஞர் கருணாநிதி உலகத் தமிழ்ச் செம்மொழி மகாநாட்டுக்கு பின்னர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதன் மூலம் சமூக சேவைகள் ஊடாக அருந்ததியர் சமூகத்துடன் மேலும் நெருக்கமாகச் செல்லக் கூடியவாய்ப்பு ஏற்படலாம் என்று கூறி தனது அரசியல் ஓய்வு குறித்த முதன் முதலான சூசக சமிக்ஞையைக் காட்டியிருந்தார்.

பின்னர் ஒரு தடவை அதே வள்ளுவர் கோட்டத்தில் கோல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் 'தமிழ்த் தலைமகன்' விருதைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய கலைஞர் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கான தனது திட்டங்கள் இன்னமும் கூட நிஜமானவையாகவே இருக்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய கருத்துகளை வெளிப்படுத்தியதன் மூலமாக தீவிர அரசியலில் இருந்து கலைஞர் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்குப் பிறகு ஓய்வு பெறக் கூடும் என்ற எதிர்பார்ப்புகளை அதிகரிக்கச் செய்தார் என்பதில் சந்தேகமில்லை.

செம்மொழி மாநாட்டின் இறுதிநாள் நிகழ்விற்குப் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கோவை நகரில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய முதலமைச்சரிடம் செம்மொழி மாநாட்டுக்குப் பிறகு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கு அவர் எற்கனவே வெளிக்காட்டிய சமிக்ஞை குறித்து கேட்கப்பட்டது.


அதற்குப் பதிலளித்த அவர் 'நான் ஒருபோதுமே ஓய்வு என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. செய்தியாளர்களாகிய நீங்கள் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறவேண்டுமென்று விரும்பினால் ஒரு திகதியைக் குறியுங்கள். நான் ஓய்வுபெற்றுக்கொள்வேன்' என்று குறிப்பிட்டார்.

கலைஞர் கருணாநிதியைத் தவிர, வேறு எவரையுமே தலைவராக ஏற்றுக்கொள்ளப் போவதில்லையென்றும் தந்தையாருக்குப் பிறகு கழகத்தின் தலைமைப்பதவிக்கு தேர்தல் நடைபெற்றால் அதில் போட்டியிடப் போவதாக மத்திய அமைச்சரான மகன் அழகிரி பகிரங்கமாக அறிவித்த பின்னர் தனது அரசியல் ஓய்வு குறித்த கேள்விகளுக்கு நழுவற்தனமான பதில்களையே கருணாநிதி கூறிக்கொண்டிருக்கிறார்.

அழகிரியை மத்திய அரசியலுக்கு அனுப்பிவிட்டு இளைய மகன் ஸ்டாலினை துணை முதலமைச்சராக்கியதன் மூலம் குடும்பத்திற்குள் சர்ச்சை உருவாவதை தடுத்துவிட முடியுமென்ற கலைஞரின் எதிர்பார்ப்பு ஈடேறக்கூடிய சூழ்நிலையைக் காணவில்லை. ஸ்டாலின் கலைஞரின் இடத்துக்கு வருவதை தன்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை அழகிரி தெளிவாகவே வெளிக்காட்டிவிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசியலில் இருந்து நான் ஓய்வுபெற முடிவெடுத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் தனது குடும்பத்திற்குள் தோன்றக்கூடிய குத்துவெட்டுக்களினாலேயே பலவீனப்படும் என்று கலைஞர் அஞ்சுகிறார் என்பது நிச்சயமானது.

## திருமணச் செலவு



சிறுவன் ஒருவன் தனது தந்தையாரிடம் நீஅப்பா, திருமணம் செய்து கொள்வதற்கு எவ்வளவு செலவாகும்' என்று கேட்டான்.

'எனக்கு திட்டவட்டமாகத் தெரியாது மகனே. ஏனென்றால் நான் திருமணம் செய்ததற்காக இன்றும் பணத்தை இழந்து கொண்டிருக்கிறேன்' என்று தந்தையாரிடமிருந்து பதில் வந்தது.

## இராஜதந்திரம்

இராஜதந்திரம் என்றால் என்ன?

நரகத்துக்குப் போவது எப்படியென்று நாம் ஒருவருக்கு விளங்கப்படுத்துவதற்கு கையாளக் கூடிய அணுகுமுறை. ஒரு தடவை நரகத்துக்குச் சென்று பார்த்தால் என்ன என்று அவரை சிந்திக்க வைப்பதற்குத் தூண்டும் வகையில் அமைய வேண்டும். அந்த ஆற்றல்தான் இராஜதந்திரம் *(Diplomacy)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆச்சிரமம் செல்லும் பெண்கள்

நாங்கள் பெங்களூருக்கு அண்மையாக அமைந்திருக்கும் சுவாமி நித்தியானந்தாவின் ஆச்சிரமத்துக்கு எங்களது சொந்த விருப்பத்தின் பேரில் செல்லவிருக்கிறோம். எங்களுக்கு எதிராக அல்லது நித்தியானந்த பரமஹம்சருக்கு எதிராக அல்லது ஆச்சிரமத்தில் இருப்பவர்களுக்கு எதிராக எங்கள் பெற்றோரினால் செய்யப்படக்கூடிய எந்த முறைப்பாட்டையும் தயவு செய்து கருத்தில் எடுக்காதீர்கள்.



தமிழ் நாட்டின் கன்னியாகுமரியைச் சேர்ந்த இரு சகோதரிகள் சென்னை நகர பொலிஸ் ஆணையாளர் ரி.இராஜேந்திரனுக்கு எழுத்து மூலமாக விடுத்திருக்கும் வேண்டுகோளில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்கள். இவர்கள் கடந்த புதன்கிழமை பொலிஸ் ஆணையாளரை நேரில் சந்தித்தனர் என்று எக்ஸ்பிரஸ் நியூஸ் சேர்விஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

எஸ்.கிருஷ்ணேஸ்வரி அல்லது நித்திய பிரீதானந்தா [வயது 29], எஸ்.சித்தினேஸ்வரி அல்லது நித்தியப் பிரவனானந்தா என்ற இவ்விரு சகோதரிகளும் பொருளியல் பட்டதாரிகள், தங்களது தந்தையார் சிவபாலன், தாயார் லக்ஷமி ஆகியோரின் எழுத்து மூலமான சம்மதத்துடன் 2006 ஆம் ஆண்டில் இருவரும் பிடாடியில் உள்ள சுவாமி நித்தியானந்தாவின் ஆச்சிரமத்தில் இணைந்து கொண்டதாகவும் பிரமச்சாரிணிகளாக தாங்கள் பணியாற்றிய அந்த ஆச்சிரமத்தினால் நடத்தப்பட்ட பல கற்கைநெறிகளில் சித்தியடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எமது குரு பரமஹம்சர் நித்தியானந்தா மீது எமது தந்தையார் அளவு கடந்த மரியாதை வைத்திருந்தார். கடந்த மார்ச் மாதத்தில் சுவாமி நித்தியானந்தா மீது போலிக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோது தந்தை எங்களை ஆச்சிரமத்தில் இருந்து வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டார். எங்களைத் துறவற நிலையில் இருந்து மாற்றி திருமணம் செய்விப்பதற்குப் பெற்றோர் முயற்சிக்கிறார்கள். நாம் அதற்கு மறுப்புத் தெரிவித்து மைலாப்பூரில் அப்பர் சுவாமி கோவில் வீதியில் உள்ள எமது மாமனார் விஸ்வரூபானந்தாவின் வீட்டுக்குத் தப்பியோடி வந்துவிட்டோம்.

'மீண்டும் பிடாடி ஆச்சிரமத்துக்குச் சென்றுவிடுவதற்கு நாங்கள் தயாராக்கிறோம். சுவாமி நித்தியானந்தாவின் ஆட்கள் எங்களைக் கடத்திக் கொண்டு போய்விட்டதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்போவதாக எமது பெற்றோர் அச்சுறுத்துகிறார்கள். எங்களையும் சுவாமி நித்தியானந்தாவையும் பொலிஸாரைக் கொண்டு கைது செய்விக்கப்போவதாகவும் அவர்கள் அச்சுறுத்துகிறார்கள். எந்தவிதமான நிர்ப்பந்தமும் இல்லாமலேயே எமது சொந்த விருப்பின் பேரில் நாம் ஆச்சிரமத்துக்குப் போகின்றோம். சுவாமி நித்தியானந்தாவுக்கோ அல்லது எங்களுக்கோ எதிராக பெற்றோரினால் செய்யப்படக்கூடிய எந்தவொரு பொய்யான முறைப்பாட்டையும் பொலிஸ் ஆணையாளர் ஏற்றுக்கொள்ளக்கூடாது' என்று அந்தச் சகோதரிகள் தங்கள் எழுத்து மூல வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார்கள்.


ஒருநடிகையுடன் சுவாமி நித்தியானந்தா இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பதைக் காண்பிக்கும் வீடியோ காட்சிகள் பற்றி இச்சகோதரிகளிடம் கேட்கப்பட்டபோது 'அந்த வீடியோ போலியானது. அது தொடர்பான வழக்கில் நிரபராதி என்று சுவாமி தன்னை நிச்சயம் நிரூபிப்பார் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது' என்று பதிலளித்தனர்.

ஆச்சிரமத்தில் சுமார் 300 பெண்கள் இருந்ததாகவும் அவர்களில் திருமணம் செய்த பெண்கள் தங்கள் குடும்பங்களுடனேயே ஆச்சிரமத்தில் வாழ்ந்ததாகவும் சகோதரிகள் கூறியிருக்கிறார்கள்.

**பெற்றோர் செய்யும் முறைப்பாடுகளை கருத்தில் எடுக்கவேண்டாமென்று பொலிஸாரிடம் வேண்டுகோள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்தும் விஸ்கியும்



ஒரு ஆணும் பெண்ணும் பனிமூட்டம் நிறைந்த ஒரு காலைப்பொழுதில் வீதியில் தங்கள் கார்களை ஓட்டிக் கொண்டு சென்றார்கள்.

இரு கார்களும் நேருக்கு நேர் விபத்துக்குள்ளாகி மீண்டும் அவற்றைத் திருத்த முடியாதளவுக்கு நொருங்கிப் போய்விட்டன. என்றாலும் ஆணுக்கோ பெண்ணுக்கோ எந்தவித காயமும் ஏற்படாமல் தெய்வாதீனமாக தப்பிப் பிழைத்துக் கொண்டார்கள்.

இருவரும் நொருங்கிய கார்களுக்குள் இருந்து வெளியே வந்து ஒருவரைப் பார்த்து மற்றவர் வியந்து கொண்டார்கள்.

எமது கார்களில் எதுவுமே மிஞ்சவில்லை. ஆனால் நாம் இருவரும் எந்த ஆபத்தும் இல்லாமல் தப்பிப் பிழைத்திருக்கிறோம். இது ஆண்டவன் செயல். நாம் இருவரும் இந்த மாதிரியாகச் சந்தித்து பின்னர் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பது தான் ஆண்டவரின் விருப்பம் போலும் என்று பெண் கூறினாள்.

பெரு மகிழ்ச்சியடைந்த ஆண் 'உங்கள் விருப்பமும் கடவுளின் விருப்பமும் அதுவாக இருந்தால் எனக்கும் சம்மதமே' என்று பதிலளித்தான்.

மீண்டும் பெண் பேசினாள்; 'பாருங்கள் எனது கார் நொருங்கிப் போயிருக்கின்ற போதிலும் அதற்குள் முன்புறப் பெட்டிக்குள் வைத்த விஸ்கிப் போத்தல் உடையவேயில்லை'.

ஆமாம் அதிசயம் தான். அதுவும் கடவுளின் செயலாகத் தான் இருக்குமென்று ஆண் கூறவே, பெண் அந்த விஸ்கி போத்தலை எடுத்துத் திறந்து அவனிடம் கொடுத்து குடிக்கச் சொன்னாள்.

'எனக்கு அரைவாசி, உங்களுக்கு அரைவாசி குடியுங்கள்' என்று சொன்னாள் அவள்.

ஆகா எவ்வளவு பண்பான பெண்ணாக இருக்கிறாளே என்று வியந்த ஆண் மடமடவென்று அரைப் போத்தல் விஸ்கியை குடித்து முடித்துவிட்டு மிகுதியை பெண்ணிடம் கொடுத்தான்.

அவளோ அதைக் குடிக்காமல் திரும்பவும் ஆணிடமே போத்தலைக் கொடுத்தாள்.

ஏன் நீங்கள் குடிக்கவில்லை என்று ஆண் அவளைக் கேட்க அவளிடமிருந்து பதில் வந்தது.

பொலிஸ் ஜீப் இந்த வீதியால் வரும்வரை நான் காத்திருப்பேன். நீங்கள் மிகுதியையும் குடியுங்கள்.

# இன்று உலகில் ஆட்சியதிகாரத்தில் இருக்கும் பெண்கள்

அவுஸ்திரேலியாவின் முதற் பெண்பிரதமராக கடந்த வாரம் ஜூலியா கிலார்ட் பதவிக்கு வந்தார் அல்லவா? அவருடன் சேர்த்து இன்று உலகில் 17 நாடுகளில் பெண்களின் ஆட்சி நடக்கிறது.



**ஆர்ஜன்ரீனா**

கிறிஸ்டினா கேர்ச்னர்

ஜனாதிபதி [2007 அக்டோபர் முதல்]



**பங்களாதேஷ்**

ஷேய்க் ஹஸீனா வாஜெட்

பிரதமர்[2009 ஜனவரி முதல்]



**கோஸ்ராறிக்கா**

லோறா ஷின்செல்லா

ஜனாதிபதி [2010 பெப்ரவரி முதல்]



**குரோஷியா**

ஜட்ராங்கா கோசோர்

பிரதமர் [2009 ஜூலை முதல்]



**சுவிற்சர்லாந்து**

டோறிஸ் லியூதார்ட்

சம்மேளன ஜனாதிபதி [2009 டிசம்பர் முதல்]



**பின்லாந்து**

ரார்ஜா ஹலோனென்

ஜனாதிபதி [2000 முதல்]



மேரி கிவினீமி

பிரதமர் [2010 ஜூன் முதல்]



**ஜேர்மனி**

அஞ்செலா மெர்கெல்

சான்ஸ்லர் [2005 நவம்பர் முதல் ]



**ஐஸ்லாந்து**

ஜொஹான்னா சிகுர்டார்டொற்ரிர்

பிரதமர் [2009 பெப்ரவரி முதல்]



**டிரினிடாட் அன்ட் டுபாக்கோ**

கம்லா பெர்சாட் பிஸ்ஸெஸ்ஸர்

பிரதமர் [2010 மே முதல்]



**பிலிப்பைன்ஸ்**

குளோறியோ அரோயோ

[ஜனாதிபதி 2004 முதல்]



**இந்தியா**

பிரதீபா பட்டேல்

ஜனாதிபதி [2007 ஜூலை முதல்]



**அயர்லாந்து**

மேரி மக் அலீஸ்

ஜனாதிபதி [1997 முதல்]



**கிர்கிஸ்தான்**

றோசா ஓடுன் பயேவா

இடைக்கால ஜனாதிபதி [2010 ஏப்ரில் முதல்]



**லைபீரியா**

எலன் ஜோன்சன் சேர் லீற்

ஜனாதிபதி [2005 நவம்பர் முதல்]



**லிது வேனியா**

டேலியா கிறிபோஸ் கைற்

ஜனாதிபதி [2009 மே முதல்]



**ஸ்லோவாக்கியா**

இலெட்டா ரடிகோவா

[2010 ஜூன் 22 இல் அரசாங்கம் அமைக்கு மாறு கேட்கப்பட்டார்]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனநோயாளராகும் இலங்கையர்

நீண்டகாலமாக நிலவிய யுத்தம் அதனுடன் இணைந்துள்ள வறுமை,வேலையின்மை, ஊட்டச்சத்து பற்றாக்குறை மற்றும் போதிய வருமானமின்மை,பொருட்களின் விலையுயர்வு போன்ற நிலைமைகளினால் இலங்கையில் மன நோயாளிகளின் எண்ணிக்கை வீதம் தினமும் அதிகரித்துச் செல்கின்றது.

இலங்கையின் சனத்தொகையில் 3 வீதமானோர் ஏதோ ஒரு வகையில் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மன நோயாளர் வைத்தியசாலைகளில் 3000 இற்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருவதுடன்,இவர்களில் 800 பெண் மனநோயாளிகள் முல்லேரியா மனநோயாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதிகளவான மனச்சோர்வு,கால நேரமின்றி அதிக உணவு உட்கொள்ளல்,திடீர் பயம்,நீண்டகால மனக்கவலை,உளவியல் சீரின்மை உட்பட பரந்தளவில் மனநோயாளர்களின் வகைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஒருவரின் சிந்தனைத் திறன் என்பது அவரது வயதுகேற்பவும் காலசூழ்நிலைகளுக்கேற்பவும் வேறுபடுகிறது.இச் சிந்தனைத் திறனை கட்டுப்படுத்துவது உடலின் தலைமைச் செயலகமான மூளையிலுள்ள நரம்புகளாகும்.ஒவ்வொருவரினதும் சிந்தனைத் திறன் பாதிக்கப்படுகின்ற போது மனநோய் ஏற்படுகின்றது.அத்தோடு எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது மனநோய் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களினது ஆசைகள், பெரியோர்களது எதிர்பார்ப்புகள், நரம்பு மண்டலத்தில் கட்டளைகளாக பதிவாகும் விடயங்கள், நிறைவேறாமல் போகும் போதே பெரும்பாலானோருக்கு மனநோய் ஏற்படுகிறது.இன்னும் சிலர் கஞ்சா,அபின் போன்ற போதைப்பொருட்களை உபயோகிப்பதால் அதிகளவு மூளை நரம்புகள் தூண்டப்பட்டு பின்னர் அது மூளையின் இசைவாக்கத்தின்படி செயற்படாமையினாலும் மனநோய்கள் ஏற்படுகிறது.

மனநோயின் தன்மைகளைப் பொறுத்து இந்நோய்க்குரிய அறிகுறிகள் வேறுபடுகின்ற போதும் அதிகநேரம் யாருடனும் பேசாமல் தனிமையில் இருப்பதுவும் ஒரே இடத்தை வெறித்துப் பார்ப்பதும் சம்பந்தமின்றி தானாகப் பேசுதல் அல்லது புலம்புதல் என்பன இதன் அறிகுறிகளாக காணப்படுகின்றன.

மனநோய் மற்றும் உளவியல் பாதிப்பு தொடர்பாக கருத்தரங்கொன்றில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டாக்டர் மேத்தா கூறுகையில்;

சுகாதாரமற்ற நிலையில் ஏற்படுகின்ற மன பாதிப்புகளும் மன நோயாளர்களும் இலங்கையைப் போன்றே ஏனைய வளர்முக நாடுகளிலும் அதிகரித்துக் காணப்படுகின்றனர்.

உலக சனத்தொகையில் 35 வீதமானவர்கள் மனநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன்,சர்வதேசரீதியில் 1 மில்லியன் மக்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.வீட்டுப் பிரச்சினைகள்,இழப்புகள்,எதிர்பார்ப்புகள் நிறைவேறாதவிடத்து மனநோயாளர்கள் அதிகரிக்கின்றனர்.

சர்வதேச ரீதியில் தற்கொலை வீதம் அதிகரிப்பில் இலங்கை 10 ஆவது இடத்தில் உள்ளது. [illegible]ணம் கடந்த காலங்களில் வடக்கு,கிழக்கில் நடந்த யுத்தமேயாகும். இதனால் பாதிப்புற்ற பெருமளவானோர் மன நோயாளிகளாகவும் தற்கொலை செய்து கொள்வதற்கும் துண்டப்படுகின்றதாக அவர் மேலும் கூறினார்.



நாட்டின் சனத்தொகையில் 4.2 வீதமானவர்கள் தற்கொலையை ஏற்றுக் கொள்ளும் மனநிலையைக் கொண்டவர்களாக அல்லது இறந்து விடவேண்டும் என எண்ணுபவர்களாகவும் 1.6 வீதமானவர்கள் தற்கொலை எண்ணத்தை நடைமுறையில் வெளிப்படுத்தியுள்ளதாகவும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

வேலையின்மை, குறைந்த வருமானம், மனித உரிமை மீறல்கள், மட்டுப்படுத்தப்பட்ட கல்வியறிவு, மனப்பதற்றம் ஆகிய அனைத்தும் மனச் சோர்வு மற்றும் கவலைக்கு வழிவகுப்பதுடன், மன நோயாளர்களாக மாறுவதற்கும் வழிவகுக்கின்றது.

இலங்கையில் 42,433 பேர் ஏதாவதொரு வகையான மன நோய்க்காக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றதாகவும் இவர்களுக்கான போதியளவு பயிற்றப்பட்ட மனநோய் மருத்துவர்கள் பற்றாக்குறை நீண்டகாலமாக நிலவுவதனாலேயே உரியமுறையில் குணமடைந்து வீடுகளுக்குச் செல்லும் மனநோயாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும் காணப்படுகிறது.

எனவே, அரசாங்கத்தால் சுகாதார சேவைகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தில் பெருமளவு தொகையினை மனநோய் மருத்துவத்திற்கு ஒதுக்குவதன் மூலமும் மனநோய் வைத்தியசாலைகளின் வசதிகளைப் பூரணப்படுத்துவதுடன், மருத்துவ நிபுணர்களை அதிகரிக்க வழிவகுப்பதன் மூலமே மனநோயாளர்களின் பெருக்கத்தைக் குறைக்கமுடியும்.

எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய்க்கு வலுச்சேர்க்கும் நவீன வாழ்க்கை முறை



புற்றுநோய் பற்றி அனைவர் மனதிலும் பயம் உண்டு. ஆனாலும் எனக்கு புற்றுநோய் இருக்கா? கண்டு பிடித்துச் சொல்லுங்கள் டாக்டர் என்ற நிலையில் தான் எமது சமூகத்தில் பலர் உள்ளனர். ஆனால், புற்றுநோய் பற்றி விழிப்புணர்வு எல்லாம் விண்ணைத் தாண்டி ஒலிக்கும் விதத்தில் வீச்சம் கொண்டு நகர்கின்றன. எனினும் புற்றுநோய்க்கு வலுச்சேர்க்கும் காரணிகள் இவை என்பது பற்றியும் எல்லோருக்கும் தெரியும். இருப்பினும் இவை எல்லாம் ஏட்டு உருவில் மட்டும் தான் என்றுதான் ஐயம் தோன்றுகிறது. எனக்குப் புற்றுநோய் இருக்கா என்ற ஐயப்பாட்டுடன் பயம் மிகுதியாகப் பெற்றுச் சோதனைகள் இன்னும் சோதனைகள், சோதனை மேல் சோதனைகள் என்று பணத்தை வீணாக்கும் மக்கள் கூட்டம் ஆரோக்கியமான வாழ்வுக்கு ஏற்ற வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்ள எத்தணித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். எதிர்வரும் காலங்களில் எம் சந்ததி புற்றுநோயின் பிடியிலிருந்து மீளும் நிலையேற்படும்.

ஆரோக்கியமற்ற உணவுமுறை அது தாண்டி உடற்பருமன் தேகப்பியாசம் துளியளவுமின்றி உயர் செறிவில் கொழுப்புச் செறிவு இவையெல்லாம் ஒன்றில் ஒன்று ஆளுகை செய்கின்ற விசமிகள் என்றுதான் கூற வேண்டும். மிகை உடல் எடை கொண்ட பெண்களில் மார்பகம்,சூல்சுரப்பி மற்றும் கருப்பையின் அகவுறை என்பவற்றில் புற்றுநோய் விருத்தியாகின்றது. இம்மூன்று உறுப்புகளிலும் கலவளர்ச்சியைத் தூண்டும் Qestrogen ஈஸ்ட்ரோஜன் என்னும் ஓமோன் உயிரியல் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றது. கொழுப்பு மிகை உணவிற்கும் இவற்றுக்கு மிடையேயான புற்றுநோய் தொடர்பைக் கருதுமிடத்து கொழுப்பு உணவுகளே ஈஸ்ரோஜனை குருதியோட்டத்தினுள் மீள உறிஞ்சப்படக்கூடியவாறு அனுமதிக்க பெருங்குடலைத் தூண்டுகின்றதென நம்பப்படுகின்றது. இவ்வாறே கொழுப்புணவும் சிறுநீர்ப்பை புற்றுநோய்க்குமிடையேயான தொடர்பை (Testosterone) எனும் ஓமோன் தீர்மானிக்கின்றது.

இவற்றின் சமநிலைக்குழப்பம் புற்றுநோயை உருப்பெறச் செய்கின்றன.

இது இவ்வாறே இருக்க தேகப்பியாசமின்மையும் மிகை கொழுப்புணவுடன் கைகோர்த்து நகர்கின்றது. உட்கார்ந்து பணியாற்றும் வாழ்க்கை முறை பெருங்குடல் புற்றுநோய் போன்றவற்றுக்கு வழி வகுக்கின்றன. அத்துடன் தேகப்பியாசமின்மையே இங்கு தொடர்புபடுத்தப்படுகின்றது. அதாவது சொகுசு வாழ்க்கை முறையே உட்கார்ந்து பணியாற்றும் வாழ்க்கை என்று கருதப்படுகின்றது. தேகப்பியாசம் இன்மையில் கழிவுப்பொருட்கள் குடலினூடு செல்கையில் தங்கியிருக்கும் இடைத்தங்கல் நேரம் மிகைப்படுத்தப்படுகிறது. இதனால் புற்றுநோயாக்கிகள் குடலுடன் தொடர்பில் நீண்டநேரம் இருக்கின்றன. இதனால் குடலில் புற்றுநோய் ஊக்கிகளில் தொடர்பினால் குடற்புற்றுநோய்க்கான வாய்ப்பும் அதிகரிக்கின்றது. இவற்றை தாண்டி உடற் செயற்பாடானது ஆண்,பெண் இருபாலாரிலும் இலிங்க ஓமோன்களின் சுரப்பு அளவில் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றது. இதனால் (Qestrogen testosterone) அளவில் ஏற்படும் மாற்றமும் புற்றுநோய்க்கு வலுச்சேர்ப்பதை முன்பு நாம் அறிவோம். இவற்றுடன் அல்லாது கர்ப்பத்தடை மாத்திரை வகைகளும் இலிங்க ஓமோன்களின் அளவில் மாற்றத்தை உண்டு பண்ணுவது அறியப்பட்ட விடயமேயாகும். இதுவும் நம் சமூகத்தில் பெரும் பங்கை வகிக்கின்ற ஒரு விடயமே ஆகும்.



இது இவ்வாறிருக்க புகை, மது இவையும் சொல்ல வேண்டியதில்லை. புகையில் 4000க்கு மேற்பட்ட இரசாயனப் பொருட்கள் உள்ளன. புகைத்தல் பற்றி சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அது எல்லோரும் அறிந்ததொன்று என்றே கூறவேண்டும். எனினும் மதுசாரத்தால் ஈரல் பாதிப்புறும் போது பல இரசாயனப் பொருட்கள் உடலில் பிரித்தழிக்கப்படாது தேங்குகின்றன. இதனுள் புற்றுநோய் ஊக்கிகளும் அடங்குகின்றன.

சூடான உணவுகள் காரம் சேர் உணவுகள் புகையூட்டப்பட்ட உணவுகள் இவை எல்லாம் நைட்ரைட்டுகள் கொண்டுபதினிடுவதால் இந்நைட்ரைட்டுகள் புற்றுநோயாக்கிகளாக அமைவதாலும் இவை நாகரிக உலகில் தொலைக்காட்சி, விளம்பரங்களில் அதிரவைக்கும் கவர்ச்சிகரமான தன்மையைக் கொண்டுள்ளமை கவலைக்குரியதாகவே உள்ளது.

இதேவேளை, மிகை வளமூட்டிய மரக்கறிகள், மருந்தேற்றிய, மற்றும் பூச்சி நாசினி விசிறிய மரக்கறிகள் இவையாவும் செய்யும் கொடுமையின் எல்லை தாங்க முடியாது என்றே கூற வேண்டும். பொதுவாக மரக்கறிகள் நார்ப்பொருட்கள் இவை குடலில் நீண்டநேரம் தங்குவன. இவற்றுக்கு மருந்துகள் ஏற்றியும் பூச்சிநாசினிகள் விசிறியும் இருப்பின் சொல்ல வேண்டுமா குடலில் நீண்டநேரம் இவ் இரசாயனங்கள் தங்குவது... இதனால் குடற்புற்று நோய் வலுச்சேர்க்கப்படுகின்றது என்றால் மிகையாகாது.

எனவே, புற்றுநோயில் இருந்து விடுதலை பெற்ற ஓர் சமூகத்தை உருவாக்கி ஆரோக்கியம் மிக்க சமூகத்தை நோக்கி நகர வாழ்க்கை முறையை செப்பனிடுவோம்.

**டாக்டர்**
**வெ.நாகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவறை என்ன கல்லறையா...?

தாயின் கருவறையை கோவிலுக்கு ஒப்பிடுவது உண்டு.காரணம் கடவுள் வாழும் கோவிலிலும் கருவறை உண்டு. கற்பூர தீப மேற்றும் கருவறையில் கற்புகள் காணிக்கையாக்கப் பட்டதற்கு காஞ்சிபுரம் ஒரு சாட்சி.சிசுக்கள் உருவாகும் கருவறைகள் கழிவறையானதற்கு நாடெங்கிலும் நடக்கும் கருக்கலைப்புகளே அத்தாட்சி.

பிள்ளை வரம் கேட்டு கோவில் குளங்களில் தவம் இருக்கும் பெண்கள் ஒரு பக்கம்.கர்ப்பமாவதற்கு மருந்து மாத்திரைகள் உதவாதா என்று மருத்துவமனைகளில் காத்து கிடப்பவர்கள் மறுபக்கம்.இப்படி தாய்மைக்கு ஏங்கும் தாய்க்குலங்கள் கொஞ்சநஞ்சமல்ல.இடையில் 'இது எதுக்கு' என்று கருவிலேயே கொல்லும் பெண்களும் லட்சக்கணக்கில் உண்டு. இந்தியாவில் மட்டும் 'இது எதுக்கு' பட்டியலில் இடம் பிடிக்கும் பெண்கள் எண்ணிக்கை ஆண்டுக்கு 1.10 கோடி என்கிறது புள்ளிவிபரம்.

கலைப்பதால் கரு மட்டுமல்ல அதை சுமந்த பெண்களும் அழிவை தேடிக் கொள்கின்றனர் என்பதுதான் ஆபத்து.கருவை கலைக்கப் போய் உயிரை பறி கொடுத்த பெண்கள் பட்டியலின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது என்பது அதிர்ச்சித் தகவல்.



இந்த உயிரிழப்புகள் முறையான மருத்துவ வசதிகளை பயன்படுத்தாமல் அனுபவமில்லாதவர்களால் செய்யப்படும் கருக்கலைப்புகளால் நிகழ்பவை.தேவையற்ற நேரத்தில் தேவையற்ற முறையில் உருவான கருவைத்தான் கலைக்கின்றனர்.கருவில் இருப்பது பெண் என்று தெரிந்ததும் கலைப்பதுண்டு.என்ன காரணமாக இருந்தாலும் உரிய மருத்துவ வசதிகளற்ற அனுபவம் இல்லாத டாக்டர்கள் கொடூரமான முறைகளை நாடுவதால்தான் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.இன்னும் சிலர் அளவு தெரியாமல் அவர்களே மருந்து மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடுவதும் சிக்கலுக்கு இழுத்துச் சென்று விடுகிறது.

வெளியில் தெரிந்து விடும் என்று பழங்கால வைத்தியங்களை சிலர் நாடிச் செல்கின்றனர்.அது தரும் விளைவுகளே விஷயத்தை வெளிச்சம் போட்டு விடுகிறது.அரசு மருத்துவமனைகளுக்கு சென்றால் அநியாய விசாரணைகள் பத்திரிகைகளுக்கு தெரிந்தால் பரபரப்புச் செய்திகள்.இந்த பயத்தைப் போக்க அவர்களுக்கு கை வைத்தியமே கை கொடுக்கிறது.சில நேரங்களில் உயிரை எடுக்கிறது.

விதிமுறைகளை மீறி முறைகேடாக மருத்துவமனைகளில் செய்யப்படும் கருக்கலைப்பும் கை வைத்தியங்களினால் செய்யப்படும் கருக்கலைப்புகளும் பதிவு செய்யப்படுவதில்லை.எனவே அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் வெளியில் தெரிவதில்லை.

சமூக கட்டமைப்பு இதற்கு காரணமாக சொல்லப்பட்டாலும் சிலரின் வசதி வாய்ப்புகளும் வெளியில் தெரியாமல் மறைத்து விடுகின்றன.ரகசிய தீர்வு காண வழியிருப்பதால் விளைவுகள் குறித்து யாரும் யோசிப்பதில்லை.அதனால் தான் புனிதமாக போற்றப்படும் கருவறை கழிவறையாக்கப்பட்டு இப்படி சுத்தம் செய்யப்படும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.



திருமணத்திற்கு முன்பு கர்ப்பம் அடைபவர்களில் கணிசமானவர்கள் இளம் வயது பெண்கள்.அதாவது 18 வயதிற்குட்பட்டவர்கள்.அதில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் 16-18 வயதுப் பெண்கள்.18 வயதிற்குட்பட்ட பெண்ணின் அனுமதியுடன் உறவு கொண்டாலும் அது பாலியல் வன்புணர்ச்சியே.எனவே இளம் வயது பெண்களை கர்ப்பமாக்குவதும் வன்புணர்ச்சியே.சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை உண்டு. இளம் பெண்கள் கர்ப்பமாவதில் பெரும் பங்கு வகிப்பது காதல்.

முறையான கர்ப்பமோ முறையற்ற கர்ப்பமோ எப்படியிருந்தாலும் நாங்கள் கலைக்கிறோம் என்று முன்வருவதில் தனியார் மருத்துவமனைகள் ஆர்வமாக இருக்கின்றன.முதல் காரணம் எல்லோருக்கும் தெரிந்தது.ரகசிய காரியங்களுக்கு துணை போனால் கூடுதல் லாபம்.இன்னொரு விவகாரம் ஸ்டெம்செல்.தொப்புள் கொடியில் இருந்து எடுக்கப்படும் இந்த செல்லைக் கொண்டு பாதிக்கப்பட்ட சில உடல் உறுப்புகளை சரி செய்ய முடியும்.நோய்களுக்கும் ஆய்வுகளுக்கும் பயன்படும் இந்த ஸ்டெம் செல்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி.அந்த அளவுக்கு காசு கொட்டும் தொழில்.அதற்கு பெரிதும் உதவுவது இந்த ரகசிய கருக்கலைப்பு வேலைகள்.

கல்யாணம் ஆகாமல் கர்ப்பமடையும். இளவயதுக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள் வறுமையில் வாடுபவர்கள், போதுமான கல்வியறிவு இல்லாதவர்கள்.கல்வியை பலி கொள்ளும் வறுமை,சமூகத்தையும் அதன் கயமையையும் புரிந்து கொள்ள முடியாமல் செய்து விடுகிறது.விளைவு வலுத்தவர்களின் இழுத்த இழுப்புக்கெல்லாம் போக வைக்கிறது.கலைப்பில் வந்து நிற்கிறது.குறிப்பாக இவர்கள் வேலைக்குச் செல்லும் இடங்களில் நடைபெறும் பாலியல் தாக்குதலின் விளைவுகள் நீளமானது.புகார் செய்தால் முதல் விளைவு வேலை போவதுதான்.நியாயத்திற்காக அடம் பிடித்தால் தேவையில்லாத பட்டங்களும் அவமானங்களும் தேடி வருவது இயல்பு. இதற்கு தீர்வுதான் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை.

வசதியற்ற கல்வியறிவு இல்லாத பெண்களின் நிலைமைதான் கிராமத்து பெண்களின் நிலைமையும். ஆனால் படித்த வசதியான நகரத்து பெண்கள் எளிதில் இந்நிலைமைக்கு ஆளாவதில்லை. கருத்தடை விஷயங்கள் பற்றியும் அதற்கு முந்தைய பாதுகாப்பு முறைகள் பற்றியும் அறிந்தே உள்ளனர்.

கல்யாணமானவர்கள் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்தாலும் சில நேரங்களில் கர்ப்பமாகி விடுகின்றனர்.குடும்ப கட்டுப்பாடு செய்து கொண்டவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல.அதிசயமாக நடக்க வாய்ப்புண்டு என்று மருத்துவர்களே ஒப்புக் கொள்கின்றனர்.முறையான உறவினால் ஏற்பட்ட கர்ப்பமாக இருந்தாலும் பிள்ளைகள்,குடும்பச்சூழல்,வயது,பொருளாதார காரணங்களுக்காக கலைக்கின்றனர்.இவர்களுக்கு ஏற்கனவே அனுபவம் இருப்பதால் கர்ப்பமானதை உடனே கண்டுபிடித்து கலைத்து விடுகின்றனர்.அதிலும் சிலர் கலைக்கலாமா?பெற்றுக் கொள்ளலாமா என்று காலம் தள்ளி பிரச்சினையை தேடிக் கொள்கின்றனர்.

இன்னொரு பிரிவினரும் இதில் உண்டு. கல்யாணமாகி இருந்தாலும் அவர்கள் கர்ப்பமானால் பிரச்சினை காரணம் கர்ப்பத்திற்கு காரணமானவர் உள்ளூரில் இருப்பார்.கணவர் வெளியூரில் இருப்பார்.அவர் வருவதற்குள் காரியத்தை முடித்து விட வேண்டும் என்ற அவசரத்தில் கலைத்து விடுவார்கள்.இந்த இரண்டு வகையினரும் கலைத்துக் கொள்வதில் பிரச்சினை இருக்காது.

நடைமுறைகளும் எளிதாக இருக்கும்.இருந்தாலும் அதை அவர்கள் பயன்படுத்துவதை பொறுத்து முடிவு இருக்கும்.

கல்யாணத்திற்கு முன்பு கர்ப்பம் தரிப்பவர்கள்தான் ரகசிய கருக்கலைப்பு செய்து கொள்பவர்கள்.அவசரக் கலைப்பையும் ஒரே நாளில் சுத்தம் செய்து வீட்டுக்கு அனுப்பக் கூடிய மருத்துவர்களையும் நாடுகின்றனர். மயக்க மருந்து தந்து கலைக்க வேண்டிய எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத இடமாக இருந்தாலும் ஊருக்கு பயந்து ஒத்துக் கொள்கின்றனர்.குடிசைகளில் வைத்து கொடூரமாக கருக்கலைப்பு செய்யும் இடத்தையும் நாடுகின்றனர்.இவற்றின் விளைவுகள் சாதாரணமானதல்ல.ஆனால் பழமையான முறையை விட ஆங்கில மருத்துவ முறைப்படி கருக்கலைக்கும் எண்ணிக்கை தான் அதிகம்.

மாத்திரையால் முடியாவிட்டால்தான் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

காசு வந்தால் போதும் என்று நினைக்கும் அனுபவமில்லாத அலோபதி மருத்துவர்கள் பலர் அறுவைச் சிகிச்சைக்கே ஆர்வம் காட்டுகின்றனர்.அலோபதி மருத்துவர்கள் மட்டுமன்றி சில இடங்களில் ஆயுர்வேதம், யுனானி,ஹோமியோபதி,சித்த வைத்தியர்களும் கொஞ்சமும் பயிற்சியின்றி அலோபத், மருத்துவமுறைகளை கையாண்டு கருக்கலைப்பு செய்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வேலையாட்கள் வில்லங்கமானவர்களா?



வீட்டு வேலைபார்க்கும் பெண்கள் எந்தளவுக்கு பிரச்சினைகள் சந்திக்கிறார்களோ அந்தளவுக்கு இல்லாவிட்டாலும் வீட்டு உரிமையாளர்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. வீட்டையும் குடும்பத்தையும் நம்பி ஒப்படைக்கிறோம்.அந்த நம்பிக்கைக்கு உரியவர்களாக அவர்கள் நடக்காமல் போகும்போதுதான் பிரச்சினையே வருகிறது என்கின்றனர் தொடர்மாடி வீட்டு உரிமையாளர்கள்.

நகை,பணத்துக்காக நடக்கும் திருட்டுகள், குற்றச்செயல்களுக்கு அதிகம் காரணமாக இருப்பவர்கள் வேலைக்கார பெண்கள்.இவர்கள் கொடுக்கும் துப்பும் தகவலும் தான் குற்றங்களுக்கு துணை போகிறது. நிறைய வழக்குகளில் இது நிரூபணமாகி இருக்கிறது என்பது பொலிஸாரின் குற்றச்சாட்டு.

குழந்தையை கடத்தி பணம் கேட்டு மிரட்டல், வெளியூர் சென்ற தொழிலதிபர் வீட்டில் கொள்ளை,நகை வியாபாரியிடம் வழிப்பறி போன்ற செய்திகளுக்கு எல்லாம் மூலகாரணமாக இருப்பவர்களில் முக்கியமானவர்கள் வீட்டு வேலை செய்பவர்கள். அதனால் தான் வேலைக்காரர்கள் பற்றிய தகவல்களை பொலிஸ் நிலையத்தில் தெரிவிக்கவேண்டுமென்று கூறப்படுகின்றது. எவரும் அதை காதில் வாங்கியதாக தெரியவில்லை.ஆள் கிடைப்பதே அரிது. அப்படியிருக்கும்போது அவர்களைப்பற்றி விசாரிக்க எங்களுக்கு ஏது நேரம்?தெரிந்தவர்கள் மூலமாகத்தான் வேலைக்கு வருகிறார்கள் என்பதால் நம்பிக்கையோடு வீட்டில் சேர்க்கிறோம். பிரச்சினை என்று வருகிறபோது பொலிஸுக்கு கூட சொல்லாமல் வெளியேற்றி விடுகிறோம். அவர்களால் பக்கத்து வீடுகளுக்கு வரும் பிரச்சினைகளைக்கூட நாங்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது என்கிறார் ஒருவர்.

**இந்தப் பிரச்சினையை எப்படி தீர்ப்பது?**

வீட்டில் வேலை செய்ய ஒருவரை சேர்த்துக்கொள்வதற்கு முன்பு அவர் முகவரி என்ன? அங்கு நிலையாக தங்கியிருப்பவரா? அவருக்க தெரிந்தவர்கள் யார்?இதற்கு முன்பு யார் வீட்டில் வேலை செய்தார்? அங்கிருந்து விலகக்காரணம் என்ன? என்பது போன்ற விபரங்களை தெரிந்து கொள்வது நல்லது.இல்லாவிட்டால் வீட்டு வேலை செய்பவரின் போட்டோ, முகவரி ஆகியவற்றை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கொடுத்தால் பிரச்சினை வரும்போது உதவும். முகவர் மூலமாக ஆட்களை தேர்வு செய்தாலும் போட்டோ முகவரி உள்ளிட்ட விபரங்களை கேட்டுப்பெற வேண்டும். அவசரத்திற்கு ஆள் கிடைத்தால்போதும் என்று சேர்ப்பது நல்லதல்ல. அதே நேரத்தில் குற்றவாளிகள் தானாக பிறப்பதில்லை.சூழ்நிலைகள் அவர்களை குற்றவாளிகளாக மாற்றுகின்றன. எனவே, எத்தனை நம்பிக்கையான நல்ல வேலைக்காரர்களாக இருந்தாலும் விலையுயர்ந்த பொருட்களை அவர்கள் கண் பார்வையில் அலட்சியமாக போட்டு வைப்பது ஆபத்து.

வீட்டு வேலை செய்பவர்கள் மூலம் வீட்டு விவகாரங்கள் வெளியில் போகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். தவறானவர்களுக்கு அது தகவலாகி விடும். எனவே வீட்டு விடயங்களை வீட்டு வேலை செய்பவர்கள் முன்பு பேசாமல் இருப்பது நல்லது. சின்னச்சின்ன சண்டை உள்ளிட்ட கருத்து மோதல்கள் கூட அவர்கள் போகும் வரை காத்திருந்து தொடர்வதுதான் சரி.வேலைக்காரர்கள் தானே என்று கண்டபடி ஏசுவது, மரியாதை இல்லாமல் அழைப்பது போன்றவை அவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தும். நேரிடையாக மோத முடியாது என்பதால் ஏதாவது மறைமுக நடவடிக்கையில் ஈடுபடலாம்.அது பெரிய இழப்பாக முடியலாம்.சக மனிதர் என்று அன்பாக நடத்துவது முக்கியம். முதலில் நிறைய உரிமை கொடுத்துவிட்டு பிறகு அதை தடுப்பதும் பிரச்சினையை ஏற்படுத்தலாம். அதிகம் இடம்கொடுக்கவும் கூடாது. அலட்சியப்படுத்தவும் கூடாது. அளவோடு இருந்தால் பிரச்சினை இல்லை.

வீடுகளில் வேலை செய்யும் பெண்கள் மற்றும் ஊழியர்கள் தவறு செய்யாத அளவுக்கு விழிப்புடன் இருப்பது வீட்டுக்காரர்களுடைய கடமை.

சில வீடுகளில் வீட்டு வேலை செய்பவர்களை முழு நேரமும் தங்கவைப்பார்கள். வேலைக்குச் செல்லும் பெற்றோர் தங்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ளவும் பிள்ளைகள் தங்கள் வயதான பெற்றோர்களை கண்காணித்துக் கொள்ளவும் இப்படி ஆட்களை வைத்துக் கொள்கிறார்கள். அந்த நேரத்தில் சம்பந்தப்பட்டவர்களை எப்படி கையாளுவது என்ற பயிற்சியும் விபரமும் வீட்டுவேலை செய்பவர்களுக்கு அவசியம்.மேலும் டாக்டர்களிடம் ஆலோசனை பெறும்போது அவர்களையும் அழைத்துச்செல்வது நல்லது.

வீட்டு எஜமானர்கள் அலட்சியமாக இருக்கக்கூடாது. அவர்கள் குழந்தைகளையும் முதியவர்களையும் எப்படி நடத்துகிறார்கள் என்பதை அறிய வேண்டும். வீட்டுப் பொருட்களை பத்திரப்படுத்துவது அவசியம்.அவசியமான பொருட்களை மட்டும் கையாள விட்டால் போதுமானது.

வீட்டு வேலை செய்பவர்களை வீட்டில் இருப்பவர்களிடம் இருந்து மட்டுமல்ல பக்கத்து வீட்டு வில்லன்களிடம் இருந்து கப்பாற்றுவதும் அவசியம்.அது அவர்களுக்கு மட்டுமல்ல வீட்டுக்காரர்களுக்கும் நல்லது. வேலை பார்க்கும் பெண்களிடம் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர் பற்றிய விபரங்களை சொல்லி வைக்கவேண்டும். இந்த எச்சரிக்கை உணர்வு அடுக்குமாடி குடியிருப்பில் கட்டாயம். அவசர உதவி எண்களை வீட்டில் எழுதி வைத்திருப்பதும் அதைப் பயன்படுத்தச் சொல்லித் தருவதும் முக்கியமானது.

வீட்டு வேலை செய்பவர்கள் ஏதாவது திருட்டு உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டதை கண்டுபிடித்தால் உடனடியாக வேலையை விட்டு நிறுத்துபவர்கள்தான் அதிகம்.பொலிஸில் புகார் செய்வதில்லை. காரணம் பொலிஸில் புகார் சொல்லி தேவையில்லாமல் எதற்கு அலையவேண்டும் என்ற எண்ணம்.சம்பந்தப்பட்டவரின் விரோதத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற தயக்கம் வேறு. அப்படியே புகார் கொடுப்பவர்கள் கூட 'சும்மா மிரட்டிட்டு விட்டுவிடுங்கள்' எனச் சொல்லி விடுகிறார்கள்.இன்னும் சிலர் 'சின்ன வழக்கா போடுங்க போதும்' என்கிறார்கள்.சில வீட்டுக்காரர்கள் தாங்கள் செய்த 'அத்துமீறல்கள் வெளியில் தெரியக்கூடாது' என்பதற்காக மன்னித்து விடுவதும் உண்டு. அதேபோல பாலியல் தொந்தரவுகளை மறைக்க திருட்டுப்பட்டம் சுமத்துவதும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பால் சேறு

வளவ துரையன்

இலக்கியத்தில் சேறு பற்றிய பல செய்திகள் விரவிக்கிடக்கின்றன. சேறு என்றதுமே நமக்குத் தண்ணீரும் மண்ணும் கலந்து உருவான ஒரு கலவைதான் மனதில் தோன்றும். தற்காலத் தமிழ் அகராதி கூடச் சேறு என்பதற்கு நீரால் குழம்பிக் கொழகொழப்பாக இருக்கும் மண் என்றே பொருள் கூறுகிறது. ஆனால், ஒரு திரவமும் ஒரு திடப் பொருளும் கலந்து உண்டாகின்ற கலவையே சேறு என்பதை நாம் உணர வேண்டும். திடப்பொருள் என்பது சிறு துகள்களாகக் கூட அமையலாம். திரவம் என்பது நீர் மட்டுமன்றி கஞ்சி,குருதி, பால் போன்றவையாகவும் அமையலாம். திருப்பாவை பன்னிரண்டாம் பாசுரத்தில்.

**'கனைத்திளம் கற்றெருமை கன்றுக் கிரங்கி**
**நினைத்து முலைவழியே நின்றுபால் சோர**
**நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்'**

என்று ஆண்டாள் பாடியுள்ளார். இப்பாடலில் ஓர் அழகான காட்சி வர்ணிக்கப்படுகிறது. இளங்கன்றை ஈன்ற எருமைகளிடமிருந்து பால் கறக்கவில்லை. எனவே, அவை கனைத்துக்கொண்டு தம் கன்றுகளை மனதில் எண்ணி இரங்குகின்றன. அதனால், அவற்றின் மடியிலிருந்து பால் சிந்துகிறது. அப்படிச் சிந்திய பாலால் மண்ணானது சேறாகிவிட அதை மிதித்து மதித்து உள்ளே செல்வதால் இல்லமும் சேறாகிவிடுகிறது.இவ்வாறு இப் பாசுரம் பாலம் மண்ணும் கலந்த சேற்றைக் காட்டுகிறது. பால் என்பதற்குப் பிரிவு என்னும் பொருள் உண்டு. வள்ளுவர் திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று பகுத்துள்ளார். சங்க காலத்தில் பசிப்பிணி போக்குதல் தலையாய அறங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. வேற்றூரிலிருந்து வரும் மக்கள் தங்கவும் அவர்களுக்கு உணவு வழங்கவும் பல தருமச் சத்திரங்கள் இருந்ததாகப் பட்டினப்பாலை கூறுகிறது. அந்நூலை எழுதிய உருத்திரங்கண்ணனார். காவிரிப்பட்டினத்தின் வீதிகள் எவ்வாறு இருந்தன என்பதைக் காட்டுகிறார்.

அப்பட்டினத்தின் சத்திரங்களில் சோறு பொங்குகிறார்கள். அப்போது வடிக்கப்படும் கஞ்சி வீதிகளில் ஆறுபோல் ஓடி வருகிறது.அக்கஞ்சி மண்ணில் கலந்து சேறானது. சூரியனின் வெயில் பட்டுப்பட்டு அது காய்ந்து விடுகிறது. காய்ந்துபோன அத் தெருக்களில் தேர்கள் ஓடுகின்றன. அதனால் படிந்த அச்சேற்றிலிருந்து வெண் துகள்கள் கிளம்பி உயரமான கோவில்கள் மீது படிந்தன.

**'சோறு ஆக்கிய கொழுங் கஞ்சி**
**ஆறு போலப் பரந்தொழுகி**
**ஏறு பொரச் சேறாகித்**
**தேரோட்டத் துகள் கெழும்**
**நீராடிய களிறு போல**
**வேறுபட்ட வினையாவத்து**
**வெண்கோவில் மாசூட்டும்'**

என்பன அப்பாடல் அடிகளாகும்.

பட்டினப்பாலை அறம் சார்ந்த சேற்றைக் காட்டுகிறது என்றால் ஒரு தனிப்பாடலில் மறம் சார்ந்த சேற்றைக் காணலாம். கல்வி, செல்வம், வீரம் ஆகியவை பொருட்பாலிலே அடங்குவதாகக் கொள்ளலாம்.

ஏகம்பவாணன் எனும் பெயர் கொண்ட சிற்றரசன் வேளாண் மரபில் வந்தவனாவான் அவனது எல்லையற்ற புகழ்கண்டு மூவேந்தர்க்கும் அவன் மீது பொறாமை இருந்தது.ஒரு முறை ஏகம்பவாணனைக் காண மூவேந்தர்கள் சென்ற போது அவன் மனைவி ஏகம்பவாணன் பணி நிமித்தமாக வெளியில் சென்றிருப்பதாகக் கூறினாள். ஏகம்பவாணனை எள்ளி நகையாடுவதாக நினைத்த அவர்கள் 'ஓ' அவர் முடி நடப்போயிருக்கிறாரா? என்று அவனது வேளாண தொழிலைக்காட்டி நாற்றுமுடி நடப்போயுள்ளாரா எனும் பொருளில் கேலி பேசினர். அதற்கு மறுமொழியாக அவன் மனைவி ஒரு பாடல் பாடினாள்.

**'சேனை தழையாக்கிச் செங்குருதீ நீர்தேக்கி**
**ஆனை மிதித்த அடிச்சேற்றில்- மானபரன்**
**மாவேந்தன் ஏகம்பவாணன் பறித்துநட்டான்**
**மூவேந்தர் தங்கள் முடி'**

ஆமாம்! என் கணவர் ஏகம்பவாணன் முடி நடத்தான் போயிருக்கிறார். படை எனும் தழைபோட்டு அதில் ரத்தம் எனும் நீரைத் தேக்கி யானைகளை விட்டு மிதித்த சேற்றில் மூவேந்தராகிய நீங்கள் தலையில் அணிந்துள்ள முடிகளை நடச்சென்றுள்ளார்' எனும் பொருளில் தன் தலைவனின் புகழை விளம்பிய இப்பாடலில் பொருட்பாலுக்கே உரிய வீரத்தால் விளையும் சேற்றைக் காண்கிறோம்.முத்தொள்ளாயிரத்தில் பாண்டியனின் நாட்டில் உள்ள செல்வ வளம் காட்டும் ஒரு பாடலில் காமத்துப்பால் தொடர்பு உடைய குங்குமமும் சந்தனமும் கலந்த சேற்றைப் பார்க்கலாம்.

**'மைந்தரோடு ஊடி மகளிர் திமிர்ந்திட்ட**
**குங்கும ஈர்ஞ்சாந்தின் சேறிழுக்கி- எங்கும்**
**தடுமாறு லாகிய தன் மைத்தே தென்னன்**
**நெடுமாடக் கூடல் அகம்'**

## இலக்கிய சுவை...

பாண்டியனுடைய மதுரை நகரில் வீதிகள், அவ்வழியே செல்வோரை வழுக்கித் தடுமாறச் செய்கின்றனவாம். ஏனெனில் இரவில் மேல் மாடங்களில் இருந்து ஆடவருடன் ஊடிய மகளிர் சாளரங்கள் வழியாக எறிந்த குங்குமத்துடன் கூடிய சந்தனத்தாலாகிய சேறு சிதறிக்கிடக்கிறதாம். இவ்வாறு இலக்கியம் எனும் ஆழ்கடலில் முக்குளித்தால் அரிய பெரும் முத்துகள் கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதந்து கொண்டே தூங்கும் விலங்குகள்

எல்லா உயிரினங்களுக்கும் தூக்கம் அவசியமான ஒன்று. தூக்கத்தின் மூலம் தான் புத்துணர்ச்சி கிடைக்கிறது. முதல்நாள் இரவு நன்றாகத் தூங்கினால் தான் மறுநாள் சுறுசுறுப்போடு வேலை செய்யமுடியும். ஒவ்வொரு உயிரினங்களின் தன்மையைப் பொறுத்து தூங்கும் முறைகள் வேறுபடுகின்றன. நீரில் மிதந்து கொண்டே தூங்கும் விலங்குகளைப் பற்றி இங்கு காண்போம். கடல் புறாக்கள், கடல் நீரில் மிதந்து கொண்டே தூங்கும் தன்மையுடையது. வாத்துகளும் அன்னப்பறவைகளும் தண்ணீரில் மிதந்துகொண்டே தான் தூங்கும். 'கூட்டிடர்ன்' என்ற பறவையும் நீரில் மிதந்து கொண்டே தூங்கும். ஆனால், அது சில நிமிடங்கள் மட்டுமே அவ்வாறு தூங்க முடியும். ஏனெனில் அதன் சிறகுகளுக்கு நீர் ஒட்டாத தன்மை குறைவு. நீண்டநேரம் மிதந்தால் தண்ணீரில் சிறகுகள் ஊறிப் போய் பறவை நீரில் மூழ்கிவிடும். நீர்யானை மூக்கு மட்டும் வெளியே தெரியும்படி நீரில் மிதந்துகொண்டே தூங்கும். குளிர்ப் பிரதேசங்களில் இரவு நேரத்தில் திடீரென நீர் உறைந்து விடுவதால் நீரில் மிதந்துகொண்டே தூங்கும் விலங்குகள் பனிக்கட்டிக்குள் மாட்டிக் கொள்வதும் உண்டு.






## காற்று ஆறுகள்...




வளிமண்டலத்தின் மேற்பகுதியில் வேகமாகச் செல்லும் 'காற்று ஆறு' ஓடுகிறது. பூமிக்கு மேலே 10 கிலோமீற்றர் உயரத்தில் 320 கிலோமீற்றர் அகலத்துக்கு இந்த ஆறு பரந்து விரிந்து காணப்படும். இந்த ஆறுக்கு 'ஜெட்ஸ்ட்ரீம்' என்று பெயர். பூமத்தியரேகைப் பகுதியில் இருந்தும் துருவப் பகுதிகளில் இருந்தும் காற்று ஆறுகள் தொடர்ச்சியாக மாறிப் மாறிப் பாய்ந்து கொண்டே இருக்கின்றன. துருவப் பகுதியின் குளிர்ச்சியும் பூமத்தியரேகைப் பகுதியின் வெப்பக் காற்றும் உலகம் முழுக்கப் பரவுவதற்கு இந்தக் காற்று ஆறுகளே காரணம் .எனவே, பூமியின் தட்ப வெப்பநிலையைத் தீர்மானிக்கும் காரணிகளில் இந்தக்காற்று ஆறுகளும் முக்கியமானவையாக உள்ளன.

## குறுக்கெழுத்துப்போட்டி - 40

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 6 | 7 | ■ | 8 | 9 | 10 |
| 11 | ■ | ■ | 12 | ■ | 13 |
| ■ | ■ | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | ■ | ■ | 21 |
| 22 | ■ | 23 | 24 | 25 | ■ |

**இடமிருந்து வலம்**

1. தமிழக முதலமைச்சர்

6. வேகம் என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)

8. மிச்சம் என்றும் கூறுவர்

14. பூமி (குழம்பியுள்ளது)

18. மொழியில் ஒன்று (குழம்பியுள்ளது)

23. மருத்துவ குணம் நிறைந்தது, காரம் கூடியது

**மேலிருந்து கீழ்**

1. சூரியனிலிருந்து வருவது

2. ஒரு கதைக்கு தேவையானது (தலைகீழ்)

4. ஒரு மணித்தியாலத்தில் இது 60 உண்டு

5. பாதத்தின் பின் பகுதி (தலைகீழ்)

10. குருதி என்றும் சொல்லலாம்

14. கஞ்சன்

18. ஆடையை இப்படியும் கூறுவர்

### குறுக்கெழுத்துப்போட்டி - 38 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. திருமணம் | 1. திரு |
| 6. குரு | 2. குருளை |
| 8. வாரம் | 4. பணம் |
| 12. பதம் | 5. வாதம் |
| 18. மங்கை | 10. கோரம் |
| 24. வலை | 15. நாமல் |
| | 16. சங்கு |
| | 21. குலை |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**இ.சிவபாலன்,**
உப்புக்கேணி வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி.

### பாராட்டுப்பெறுவோர்

01. ஏ.செபஸ்தியன்,
இல. 24/2, கலாள்பிடிய வீதி,
உடுப்பிட்டிய, உக்குவளை.

02. ஏ.உதுமாலெவ்வை,
17, வேக்கந்தை ஜூம் ஆ மஸ்ஜித் வீதி,
கொழும்பு-02.

03. இ.நந்திகா,
இரும்பு மதவடி,
வதிரி, கரவெட்டி.

04. யோசப் டொரிங்டன் ஸ்பெக்,
59/1, லேடி மெனிங் டிரைவ்,
மட்டக்களப்பு.

05. க.ஞானமுத்து,
அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்,
கைதடி மேற்கு, கைதடி.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

## விடுகதை

1. வெள்ளை மாளிகைக்கு வாசலும் இல்லை. வழியும் இல்லை. அது என்ன?
2. தேடிக் கிடைத்ததைக் கூடி உண்பான். அவன் யார்?
3. மூக்கில் பூச்சூடியவன் காலையில் எழுப்புவான். அவன் யார்?
4. அனலில் பிறப்பான்; ஆகாயத்தில் பறப்பான். அவன் யார்?
5. கையில்லாமல் நீந்தும்; கொம்பிருந்தும் குத்தாது. அது என்ன?
6. ஓடியாடிக் கத்தும்; உடலைத் தேடிக் குத்தும். அது என்ன?
7. ஆடாதவன்; அசையாதவன்; மழைக்கு வேண்டியவன். அவன் யார்?
8. சுமக்கத் தயங்காதவன்; உதைக்கவும் தயங்கமாட்டான். அது என்ன?
9. அடாபுடா என்பான்: அடுப்பங்கரையை விட்டு வெளியே வரமாட்டான். அவன் யார்?
10. பறக்கும்; ஆனால், பறந்து செல்லாது? அது என்ன?
11. நீரிலே பலம்; தரையில் ஜடம். அது என்ன?
12. மோகத்தின் நண்பன்; தாகத்துக்கு உதவுவான். அவன் யார்?
13. அங்கும் இங்கும் ஆடும்; அசையாமல் நின்றால் சரியான தீர்ப்பு. அது என்ன?
14. எட்டுவது போல் தெரியும்; ஆனால், எட்டாது. அது என்ன?

1. முட்டை 2. காகம் 3. சேவல் 4. புகை 5. படகு 6. கொசு 7. மலை 8. கழுதை 9. நாக்கு 10. கொடி 11. முதலை 12. மழை 13. தராசு 14. வானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவருந்த முடியாத உணவகங்கள்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று சொல்லப்படுகின்றது. இந்த நோயற்ற வாழ்வைப் பெறுவதற்காகவே பல மில்லியன் கணக்கான பணம் செலவு செய்யப்பட்டு உலகெங்கும் சுகாதாரச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. எந்தவொரு நாட்டில் சுகாதார நடவடிக்கைகள் மேம்பட்டு விளங்குகின்றனவோ அந்த நாட்டிலேயே மனிதர்களின் ஆயுட்காலம் அதிகமானதாக இருக்கின்றது.

ஆனால் தற்போது யாழ். குடாநாட்டைப் பொறுத்த வரையில் இங்கு சுகாதாரச் செயற்பாடுகள் மிக மோசமானதாகவே உள்ளன. எந்தகைய அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்ற போதிலும் அதனைக் கடைப்பிடிப்பதில் பூஜ்ஜியமான நிலை எதிர்நோக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக யாழ் நகரிலுள்ள உணவகங்கள் சிலவற்றின் நிலை தொடர்பாக இப்பத்தியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்நகரில் பல உணவகங்கள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை விட ஏற்கனவே இங்கிருந்த உணவகங்களும் விருத்தி பெற்றிருக்கின்றன. தற்போது தினமும் யாழ் நகருக்கு வந்து செல்கின்ற பொதுமக்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் இந்த உணவகங்களின் தேவையும் இன்றியமையாதவையாக உள்ளன. இந்த உணவகங்கள் சிலவற்றில் கடைப்பிடிக்கப்படுகின்ற சுகாதாரமற்ற செயற்பாடுகள் விரைவாக தொற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய நிலையைத் தோற்றுவிக்கின்றன.



நகரிலுள்ள பெரும்பாலான உணவகங்களில் உணவுகளைப் பரிமாறுவதற்கு "இடுக்கிகள்" பயன்படுத்தப்படுவதில்லை. அங்குள்ள ஊழியர்கள் தமது கைகளாலேயே உணவுப் பண்டங்களை எடுத்துத் தட்டுகளில் அடுக்கி பரிமாறுகின்றனர்.

உணவகங்களுக்குச் சென்று அமர்ந்திருக்கும் பொதுமக்களுக்கு "என்ன வகையான எத்தனை உணவுப் பண்டங்கள் வேண்டும்" என்ற கேட்டுக் கேள்வி எதுவுமில்லாமல் அமர்ந்திருப்பவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஊழியர்கள் தாங்களாகவே உணவுப் பண்டங்களை எடுத்துவந்து வைக்கின்றனர். வந்து அமர்ந்திருப்பவர்களோ அந்த உணவுப் பண்டங்களின் மேல் தங்கள் விளையாட்டுகளைக் காட்டுவார்கள். வடையை எடுத்து 'அமத்திப் பார்த்து' "கொஞ்சம் அவியேல்லைப்போல இருக்கு". வாய்ப்பனை எடுத்துப் பொத்திப் பிடித்து "சரியான எண்ணெயாக இருக்கு" 'றோல்' எடுத்து கையில் வைத்துக் கொண்டு "அண்ணை மச்சமா தீயதா" என்பார்கள். இந்த விசாரணைகள் முடிவதற்குள் அவர்களின் கைகளிலிருந்த "அழுக்குகள்" உணவுப் பண்டங்களில் படிகின்றன. ஆனால் இவர்கள் எடுத்து உண்பதோ ஏதாவதொரு வடை அல்லது வாய்ப்பன். மிகுதி உணவுப் பண்டங்கள் அப்படியே கண்ணாடிப் பெட்டிக்குள் செல்கின்றன.

இவர்கள் சென்ற பின்னர் அடுத்து வந்து அமர்பவர்களுக்கு அந்தத் தட்டு பரிமாறப் படுகின்றது. அவர்களும் அதே கேள்விகளுக்குப் பின்னர் ஓரிரு பண்டங்களை எடுப்பர். மிகுதி மீண்டும் கண்ணாடிப் பெட்டிக்குள்.

சில உணவங்களில் உணவு பரிமாறுபவர்கள் கூட சுகாதாரச் செயற்பாடுகளைக் கடைப்பிடிப்பதை அவதானிக்க முடியவில்லை. அண்மையில் ஒரு உணவகத்திற்குச் சென்றேன். அங்கு உணவுபரிமாறுபவர் பின் பக்கம் சென்று பீடி குடித்துக்கொண்டிருந்தார். பின்னர் சாரத்தில் கையைத் துடைத்துவிட்டு வந்து அதே கையால் உணவுப் பண்டங்களை எடுத்து வந்து என்முன் வைத்தார்.

சில ஊழியர்கள் [illegible] பாக்கு மென்றவாறு 'அதக்கலான வாயுடனும்' அழுக்கான ஆடைகளுடனும் நின்று உணவு பரிமாறுகின்றனர். கை,கால்களில் புண்கள் உடையவர்கள் கூட உணவகங்களில் பணியாற்றுவதை அவதானிக்க முடிகின்றது.

மதிய உணவு வழங்கப்படுகின்ற சில உணவகங்களில் பொலித்தீன் கடதாசிகளுக்குப் பதிலாக வாழை இலைகள் பயன்படுத்தப்படுகின்றன. இது வரவேற்கத்தக்க விடயம். ஆனால் இந்த வாழை இலைகளைக் 'கழுவாமலேயே' சோற்றுப் பாசல் கட்டுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அண்மையில் என்னைச் சந்தித்த நண்பர் ஒருவர் "என்னண்ணை பேப்பர்காரரெண்டு இருக்கிறியள். இதை எழுத மாட்டியளோ?" என்றார். அவர் கொஞ்சம் கடுப்பாக இருந்ததை உணர்ந்து மிக மெதுவாக "என்ன விசயம்" என்றேன். "உந்தச் சாப்பாட்டுக் கடைக்குப் போனன். [கடையின் பெயரையும் அமைவிடத்தையும் சொன்னார்] முற்பகல் 11.30 மணியிருக்கும். அண்ணை சோறு இருக்கோ" என்று கேட்டன். "ஓமெண்டு சொன்னாங்கள். சாப்பிடுவம் என்று விட்டு இருந்தன். [illegible] இருந்து ஒரு சட்டியுடன் [illegible] கொண்டு வந்தார்கள். கறிகளையும் போட்டுத் தந்தார்கள். சாப்பிடேக்கையே நினைச்சனான் நேற்றைய சோறாகத்தான் இருக்குமெண்டு. இப்ப வயிற்றைக் கலக்குது" என்றார்.

எனது நெருங்கிய நண்பர்கள் இருவர் தங்களுக்கு நேர்ந்த அனுபவம் தொடர்பாக விபரிக்கையில், சாப்பாட்டுக் கடை பளபள என்று புதுசாத்தான் இருந்தது. ஒரு நாள் மத்தியானம் போய்ச் சாப்பிட்டம். சாப்பாடும் நல்லதாகத்தான் இருந்தது. ஆனால் வயிற்றுக்குள் ஒரே கோளாறு. மூன்று நாளாக ஒழுங்கா சாப்பிட முடியவில்லை என்றனர்.

உணவகங்களில் நிலவுகின்ற சுகாதாரமற்ற நிலைமைகள் காரணமாகவே அங்கு சென்று உணவருந்துவோருக்கு இவ்வாறான உபாதைகள் ஏற்படுகின்றன. சில உணவகங்களில் உணவு தயாரிக்கும் இடங்கள் வீதியை அண்மித்ததாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வீதியால் வாகனங்கள் செல்கின்ற போது அவற்றின் நச்சுப் புகை மற்றும் புழுதிகள் போன்றன இந்த உணவு தயாரிப்பு இடங்களை ஆக்கிரமிக்கின்றன.

மேலும் உணவகங்களில் குடிப்பதற்காக வைக்கப்படுகின்ற நீரும் சுத்தம் சுகாதாரமற்ற நிலையிலிருப்பதை அவதானிக்க முடிகின்றது. சில உணவகங்களில் தொடர்ச்சியாகவே இலையான்கள் மொய்த்த வண்ணமிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளை விசுறுவதில் கூட உணவக உரிமையாளர்கள் அக்கறை காட்டுவதில்லை.

இவ்விடயத்தில் யாழ்.மாவட்டச் சுகாதாரத் துறையினர் உடனடியாக அக்கறையெடுக்க வேண்டும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று உணவக உரிமையாளர்களுடனான சந்திப்புகளை மேற்கொண்டு அவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

மேலும் தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். குறிப்பாக உணவகங்களுடன் மட்டும் நின்றுவிடாமல் வீதிகளிலும் பஸ்கள் மற்றும் சிற்றூர்திகளிலும் உணவுப் பண்டங்களை விற்பவர்கள் விடயத்திலும் உரிய கண்காணிப்பைச் செலுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைகள் ஏற்படாமல் தடுப்பதற்காக சுகாதாரத் துறையினர் உணவகங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் மட்டுமே எமது யாழ்.மாவட்டத்தை சுத்தம், சுகாதாரத்துடன் கூடிய ஆரோக்கியமான மக்கள் வாழும் பூமியாக மாற்ற முடியும்.

என்.பிருந்தாபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளியோபாட்ராவாக அஞ்சலினா ஜூலி



பல பேரரசர்களை தனது அழகால் பதறடித்த கிளியோபாட்ராவின் வேடத்தில் நடிக்கவுள்ளார் ஹொலிவூட் நடிகை அஞ்சலினா ஜூலி. 1963 ஆம் ஆண்டு எகிப்திய பேரழகி கிளியோபாட்ராவின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட 'கிளியோபாட்ரா எ லைப்' என்ற திரைப்படம் வெளியானது. அந்தப் படத்தில் கிளியோபாட்ராவாக எலிசபெத் டெய்லரும் அவரது காதலன் மார்க் அன்டனியாக டெய்லரின் நிஜ காதலன் ரிச்சர்ட் பர்டனும் நடித்தனர். இப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. தற்போது அதே திரைப் படத்தை நவீன தொழில்நுட்ப உதவியுடன் மீண்டும் தயாரிக்கின்றனர். 'கிளியோபாட்ரா:எ லைப்' படத்தின் உரிமையை ஸ்காட் ருடின் என்ற தயாரிப்பாளர் வாங்கியுள்ளார். இந்தப் படத்தின் இயக்குநர் ஸ்டீவன் சோடர்பொக் படத்தில் கிளியோபாட்ராவாக நடிக்க ஹொலிவூட்டின் முன்னணி நடிகையான அஞ்சலினா ஜூலியும் மார்க் அன்டனியாக அவரின் வாழ்க்கைத் துணைவர் பிராட் பிட்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.இது குறித்து படத் தயாரிப்பு நிறுவன அதிகாரிகள் கூறுகையில்;

அப்போதைய கிளியோபாட்ரா திரைப்படம் தற்போதைய நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி சிறு சிறு மாற்றங்களுடன் புதிதாகத் தயாரிக்கப்படுகிறது. இந்த கதாபாத்திரத்திற்கு அஞ்சலினா மிகவும் பொருத்தமானவர்.ஏற்கனவே ஒஸ்கார் விருது பெற்றுள்ள இவர் இந்த படத்திற்காக இன்னும் ஒரு விருது வாங்குவார் என்று நம்புகிறோம் என்று அவர் கூறினார்.

## நாயகனாகும் குறளரசன்

மறுபடியும் போஸ்டர் ஒட்டுவது வரை அத்தனை பொறுப்புகளையும் தனியாளாய் தோளில் சுமந்து படமெடுக்கத் தொடங்கிவிட்டார் டி.ஆர். படத்தின் பெயர் ஒருதலைக் காதல். 1980 இல் ஒருதலை ராகம் பேசப்பட்டது.2010 இல் ஒருதலைக் காதல் பேசப்படும் என்று சவால் விடும் டி.ஆர். அதற்காக சூப்பராக ஏழு பாடல்களையும் எழுதி கம்போஸ் பண்ணி விட்டாராம். விரைவில் தன் இளைய மகன் குறளரசனையும் களமிறக்குவதாக இருக்கிறார். ஒருதலைக்காதல் படம் முடிந்ததும் குறளரசன் படத்திற்கான கதையில் கவனம் செலுத்தப்போவதாகக் கூறும் டி.ஆர். அதற்காக இப்போதே அவரை ஜிம், டயட், டான்ஸ் என தயார் செய்து வருகிறார்.

## Saturday சினிமா

### மும்தாஜின் நிபந்தனை



திரைப்படங்களில் தன் கெட்ட ஆட்டத்தின் மூலம் இளசுகளின் நெஞ்சைக் கலங்கடித்த மும்தாஜ் திடீரென பாதை மாறத் தொடங்கியிருக்கிறார். பாடலுக்கு ஆடக் கூப்பிடுபவர்களிடமெல்லாம் டான்ஸ் ஆடுகிறேன், கூடவே படத்துல எனக்கொரு வேடம் கொடுங்க என்று நிபந்தனை போடுகிறார்.

தமிழில் பௌர்ணமி நாகம் படத்தில் நாயகி வேடம், தியாகராஜனின் மம்பட்டியான் ரீமேக் படத்தில் கரகாட்டக்காரி வேடம், தெலுங்கு, ஹிந்திப் படங்களில் சிறிய வேடங்கள் என அசத்தி வருகிறார்.

## மலையாளத்தில் விவேக்



முதல் முறையாக மலையாளப் படத்தில் நடிக்கவிருக்கிறார் விவேக். இயக்குநர் ஜோன்சன் ஒரு நுணக் கதா என்னும் படத்தை இயக்கிவருகிறார். இதில் தமிழகப் பொலிஸ் அதிகாரி வேடத்திலேயே விவேக் நடிக்கிறார். கூடவே கான்ஸ்டபிளாக வருபவர் அவரது நகைச்சுவை உதவியாளர் செல் முருகன். தமிழ்ப் பொலிஸ் அதிகாரியாக வருவதால் மலையாளத்தில் பேச வேண்டிய சிரமமும் இல்லை.



எந்திரன்—ரஜினிகாந்த்

## விக்ரம் ஜோடியாக அனுஷ்கா



தெலுங்கு படம் ஒன்றில் மகேஷ்பாபு ஜோடியாக நடித்து வருகிறார் அனுஷ்கா.இந்தப் படத்தில் இன்னொரு நாயகியாக சமந்தா நடிக்கிறார்.படத்தின் படப்பிடிப்பு பூனாவில் நடக்கிறது.மகேஷ்பாபுவுடன் அனுஷ்கா நடிக்கும் பாடல் காட்சிகளை பூனாவில் படமாக்கி வருகின்றனர். 'சிங்கம்' படத்துக்கு பின் தமிழில் நிறைய வாய்ப்புகள் வந்தாலும் நல்ல கதைகளையே தேர்வு செய்து நடிக்க அனுஷ்கா விரும்புவதாக அவரது தரப்பு தெரிவிக்கிறது.பூபதி பாண்டியன் இயக்கும் 'வெடி' படத்துக்கு அனுஷ்காவை நாயகியாக்க பேச்சு நடக்கிறது.இதில் நாயகனாக விக்ரம் நடிக்கிறார்.விக்ரமின் ஜோடியாக இலியானாவுக்கு வாய்ப்புகள் அதிகம் இருந்தாலும் அவரின் கால்ஷீட் பிரச்சினை அனுஷ்காவுக்கு சாதகமாக அமையும் என்கிறார்கள்.தமன்னாவிடமும் பேச்சு நடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டியான பிரியங்கா



உலக அழகி என்ற பட்டம் பெற்ற பிரியங்கா சோப்ராவுக்கு உலக நாயகி ஆகும் ஆசை வந்து விட்டது.தமிழ் சினிமா மூலம் திரையுலகில் நுழைந்த பிரியங்கா இப்போது பொலிவூட்டின் முன்னணி நாயகிகள் வரிசையில் இடம் பிடித்திருக்கிறார்.பேஷன் படத்தின் மூலம் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற சந்தோசத்தில் மிதக்கும் அவருக்கு அடுத்தடுத்து படவாய்ப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன.தனக்கு பிடித்த வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் மட்டுமே நடிக்க விரும்பும் பிரியங்கா ஒரே படத்தில் பல வேடங்களில் நடிக்கவும் ஆசைப்பட்டார்.இதனையறிந்த இந்திப்பட இயக்குநர்கள் பலர் அதற்கேற்ற கதைகளுடன் பிரியங்காவின் வீட்டுக் கதவை தட்டியிருக்கிறார்கள்.அதில் சாட் சூன்,மாப் என்ற படத்தில் நடிக்க பச்சைக் கொடி காட்டிய அம்மணி உற்சாகத்துடன் படப்பிடிப்பில் பங்கேற்று வருகிறாராம்.படத்தில் பிரியங்கா 18 வயது பேத்தி வேடத்தில் தொடங்கி 68 வயது பாட்டி வேடம் வரை நடிக்கப் போகிறாராம்.தசாவதாரம் படத்தில் 10 வேடத்தில் நடித்து உலக நாயகனாக வலம் வந்து கொண்டிருக்கும் கமல்ஹாசனைப் போல உலக நாயகியாக வலம் வர வேண்டும் என்பதுதான் பிரியங்காவின் விருப்பமாம்.

## இயக்குநராகும் ராம்கி



ராம்கியை ஞாபகமிருக்கிறதா நிரோஷாவுக்குப் பின்னால் 'செந்தூரப் பூவே' என்று பாட்டுப்பாடிப் பாடித் திரிந்தாரே. இணைந்த கைகள் படத்தில் நடித்திருந்தாரே அவரே தான். மீண்டும் திரையுலகில் காலடி எடுத்து வைக்கப்போகிறாராம். பயப்படாதீர்கள் இம்முறை கதாநாயகனாக அல்ல. இயக்குநராக வருகிறார். முன்னணி நடிகர் நடிகைகளோடு புதுமுகங்களும் நடிக்கும் இந்தப் படம் வித்தியாசமான காதல் கதையாம்.

என்ன தலைப்பு வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் ராம்கி.

## பாக்யராஜின் நிலை



ஒரு காலத்தில் வெற்றிப் படங்களுக்கும் அசத்தலான திரைக்கதைகளுக்கும் பெயர் பெற்றவராக இருந்தவர் பாக்யராஜ். காலச் சக்கரத்தின் சுழற்சியில் இப்போது சிறு வேடங்களில் மட்டும் அவ்வப்போது தலைகாட்டி வருகிறார். இருந்தாலும் அவரது சினிமா அறிவை அப்படியே விட்டுவிடுமா திரையுலகம். தெலுங்கில் பெரிய வெற்றி பெற்ற மகதீரா தமிழில் தயாராகிறது. அந்த ரீமேக் படத்தில் ராம்சரண் தேஜா காஜல் அகர்வால் ஜோடி நடிக்கின்றனர். இந்தத் தெலுங்குப் படத்துக்கு தமிழ்ச் சாயல் தருவதும் வசனத்தை எழுதுவதும் பாக்யராஜ். நல்லவேளை வசனம் மட்டும்தான் கொடுத்தாங்க. கதையையே கொடுத்திருந்தால் முருங்கைக்காய் காட்சி மாதிரி ஏதாவது விலங்க காட்சி வைத்திருப்பார்.

## இயக்குநரின் நம்பிக்கை

வெண்ணிலா கபடிக்குழு சுசீந்திரனின் அடுத்த படமான நான் மகான் அல்ல விரைவில் திரைக்கு வர இருக்கிறது. கார்த்தி, காஜல் அகர்வால் நடிக்கும் இந்தப் படம், சூர்யாவைப் பின்னுக்குத் தள்ளி கார்த்தியை முன்னுக்குக் கொண்டுவரும் என்கிற ரீதியில் பிளந்து கட்டுகிறார் இயக்குநர். படம் வெளியாவதற்கு முன்பே இரண்டாவது படம் பண்றவங்க கொஞ்சம் அப்படி இப்படித் தடுமாறுவாங்க. நான் அப்படித் தடுமாறவில்லை. இது வெற்றிப்படம் என்கிற ரீதியில் ஃபிலிம் இல்லாமே ரீல் ஓட்டுகிறார் இயக்குநர். அவரது நம்பிக்கை எத்தனை தூரம் சரியென்று இன்னும் கொஞ்ச நாட்களில் ரசிகர்கள் சொல்லத்தானே போகிறார்கள்.

## வேகம் காட்டும் ஸ்ருதி



கமலின் மகள் ஸ்ருதிஹாசன் தன் சினிமா வாழ்க்கையை லக் படத்தின் மூலம் தொடங்கினார். இடையில் சத்தமே இல்லை தற்போது மறுபடியும் படங்களில் நடிப்பதில் வேகங்காட்டத் தொடங்கியிருக்கிறார். இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சூர்யா ஜோடியாக 7 ஆம் அறிவு படத்தின் ஒப்பந்தமாகியுள்ள ஸ்ருதி இந்திப் படங்களில் மீதே பெரிதும் கண் வைத்துள்ளார். இந்தியின் முன்னணி இயக்குநர் மதுர் பண்டார்கார் இயக்கும் தில் தோ பச்சா ஹேஜி படத்தில் இம்ரான் ஹாஸ்மியுடன் ஜோடி சேருகிறார். இதுபோக வேறு சில இந்திப் படங்களில் நடிப்பதற்கான பேச்சுவார்த்தைகளிலும் ஆர்வங்காட்டி வருகிறார் ஸ்ருதி. பெரிய கம்பனி அல்லது பெரிய இயக்குநர் இதுதான் அவரது குறி.

நான் மகான் அல்ல–கார்த்தி, கஜோல் அகர்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பற்ற பெற்றோரால் வழி தவறும் பிள்ளைகள்

பிள்ளைகள் வாழ்வில் இரு சுடர்களாகத் திகழ்பவர்கள் பெற்றோர்கள். இவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை செலுத்தி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் செயற்பட வேண்டும்.பிள்ளைகளின் முதற்பள்ளிக் கூடமாகவும் நண்பர்களாகவும் இவர்கள் இருந்து செயற்படின் உன்னதமான மனிதர்களை நாளைய உலகு நிச்சயம் சந்திக்கும்.

ஒரு பிள்ளை தனக்குரிய வாழ்வியல் மாதிரிகளையும் அடையாளங்களையும் தமது பெற்றோர்களிடம் இருந்தே கற்றுக்கொள்கின்றது. ஆனால், இன்றைய வியாபார உலகில் பிள்ளைகளுடன் சுயாதீனமான முறையில் பழகுவதற்குக் கூட நேரத்தை ஒதுக்காது பெற்றோர் அலைந்து திரிகின்றனர்.இதனால், தன் எண்ணப்படியே பிள்ளை வளர்ந்து வருகின்றது.உன்னதமானதும் உயர்வானதுமான இந்தப் பிள்ளைப் பருவம் அங்கே கேள்விக்குறியாகின்றது.

வன்னிப்போரில் பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஒருபுறம், பெற்றோர் இருந்தும் அன்பு,அக்கறை இன்றி வளர்கின்ற பிள்ளைகள் மறுபுறம் என 'பிள்ளைகள் உலகம்' தனியாகச் சஞ்சரிக்கின்றது. இவர்கள் மூலம் எண்ணற்ற நலன்களை உலகு எதிர்பார்த்திருக்க அவர்கள் உலகம் சுருங்கிச் சென்று கொண்டிருப்பதை யாருமே அவதானிப்பதாக இல்லை.

பெரும்பாலான வீடுகளில் அன்னையர்கள் தம் இதர வேலைகள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தொலைக்காட்சியே தஞ்சம் என்று இருப்பதை அவதானிக்க முடிகின்றது.இவர்கள் தம் பிள்ளைகளையும் அருகே அமர்த்தி வைத்திருந்து அங்கு ஒளிபரப்பப்படுகின்ற 'வன்ம நாடகக் காட்சிகளைத்' தரிசிக்கின்றனர்.தமது பொழுது போக்கிற்காகவும் மன மகிழ்ச்சிக்காகவும் அந்த நாடகங்களைப் பார்க்கின்ற அன்னையர், பிள்ளைகள் மனதில் அவர்களையுமே அறியாது வளர்கின்ற 'வன்ம உணர்விற்கு' பாத்திரவாளியாகின்றனர்.



இன்னும் சில இல்லங்களை நோக்கின் அங்கு தாய்,தந்தையர் இருவருமே வேலைக்குச் செல்கின்ற நிலையுள்ளது. இதனால், தாம் வேலைக்குச் செல்லும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கூடத் தமது பிள்ளைகளுடன் அன்பாகப் பேசுவதற்கும் அவர்களை வெளியிடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கும் முயல்வதில்லை. இதனால், பிள்ளைகளின் மனம் 'இறுக்கமடைந்து' செல்கின்றது.


மனிதப் பண்பாடுகளும் விழுமியங்களும் மறைந்தும் மங்கியும் செல்கின்ற இன்றைய உலகில், 'வன்முறையே' தலைதூக்கி நிற்கின்றது. இதற்கு முழுக்க முழுக்கப் பாத்திரவாளிகளாக இருப்பவர்களே அந்த வன்முறையாளியின் பெற்றோர்களே! 'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே' சான்றோன் ஆக்கல் தந்தையின் கடனே' என்ற புறநானூற்று வரிகளிலேயே இன்றும் உலகம் சுழன்று கொண்டிருக்கின்றது. அதைவிடுத்து 'இருவரும்' இணைந்து தம் பிள்ளைகளைச் சான்றோர்களாக்க முயலவேண்டும்.

தாம் பெற்றெடுக்கின்ற பிள்ளைகளை நான்கு பேர் போற்றுவதற்கும் ஏற்றுவதற்கும் ஏற்ற வழிமுறைகளைப் பெற்றோர்கள் செய்தல் வேண்டும். இதற்காக அவர்கள் பிள்ளைகள் வளர்ப்பில் அதிக அக்கறை காட்டல் வேண்டும். இதன் மூலம் புதிய ஓர் உலகை நிச்சயம் உருவாக்க முடியும்.

எஸ்.ரூபனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# பெனிக்னோ அகியுனோ

பிலிப்பைன்ஸின் 15 ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவரே பெனிக்னோ அகியுனோ.

கடந்த மே மாதம் பிலிப்பைன்ஸில் நடைபெற்றிருந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியிருந்த அகியுனோ கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளார்.

பிலிப்பைன்ஸ் அரசியலில் செல்வாக்கு மிக்க குடும்பமொன்றின் வாரிசான அகியுனோ, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளார்.

பிலிப்பைன்ஸின் வரலாற்றில் மிக முக்கிய நிர்வாகப் பதிவாகியிருக்கும் மக்கள் சக்தி புரட்சிக்கு தலைமைதாங்கிய முன்னாள் ஜனாதிபதி கொரசோன் அகியுனோவின் மகனாகப் பிறந்தவர்தான் பெனிக்னோ அகியுனோ.

1960 பெப்ரவரி 08 இல் பிறந்த பெனிக்னோ சியோன் நொய்நொய் கொஜுயாஸ்கோ அகியுனோ (III) பெனிக்னோ அகியுனோ கொரசோன் அகியுனோ தம்பதிகளின் மூன்றாவது குழந்தையாவார்.

அகியுனோ குடும்பத்தின் ஒரேயொரு ஆண் வாரிசான இவருக்கு 4 சகோதரிகள் உண்டு.

தனது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து அரெனோடீ மணிலா பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் பட்டப் படிப்பினை பூர்த்தி செய்தார் அகியுனோ.

1972 இல் இராணுவச் சட்டத்தினை அமுல்படுத்திய அன்றைய சர்வாதிகார ஆட்சியாளர் மார்கோஸுக்கு எதிராக போராட்டத்தை நடத்தி வந்த அகியுனோவின் தந்தை அஞ்சாத வாசத்தின் பின்னர் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய போது விமான நிலையத்தில் வைத்து மார்கோஸினால் படுகொலை செய்யப்பட்டார்.

இதனை அடுத்து ஜனநாயகப் போராட்டத்தை வழிநடத்திய கொரசோன் அகியுனோ 1986 இல் மக்கள் புரட்சிக்கு தலைமை தாங்கி சர்வாதிகார ஆட்சியை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து 18 மாதங்கள் அதிகாரத்திலிருந்த கொரசோன் கடந்த 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 இல் மரணமானார்.

இந்நிலையில் அகியுனோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமென பலரால் அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இணக்கம் தெரிவித்தார்.

மணிலா பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை பூர்த்திசெய்த பின்னர் லிபரல் கட்சியின் செயலாளர், துணைத் தலைவர், உள்ளிட்ட உயர் பதவிகளை வகித்ததுடன், அந்நாட்டின் காங்கிரஸ் மற்றும் செனட் சபையின் உறுப்பினராகவும் தெரிவானார்.

இவ்வாறாக பல பதவிகளை அலங்கரித்த அகியுனோ கடந்த மே மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று கடந்த வாரம் ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

ஊழல், வறுமை, அரசியல் வன்முறைகள், கிளர்ச்சிக்காரர்களின் நடவடிக்கைகள் மற்றும் இராணுவத்திற்குள் நிலவும் குழப்பநிலை ஆகியவற்றுடன் போராடும் பிலிப்பைன்ஸை ஸ்திரமான நாடாக மாற்றவேண்டுமென்பதே அகியுனோவின் இலக்காகும்.

அத்துடன் உலகின் முதலாவது பிரம்மச்சாரியான ஜனாதிபதி என்ற பெருமை அகியுனோவைச் சேர்ந்துள்ளதுடன், குழந்தைகள் அற்ற முதலாவது ஜனாதிபதி, மதுசாரம் அருந்தாத இரண்டாவது ஜனாதிபதி என்ற பெருமைகளும் அவரைச் சார்ந்துள்ளது.

தனது பெற்றோரின் நற்சேவையை மூலதனமாக்கி ஆட்சி அதிகாரத்தை தன் வசப்படுத்தியிருக்கும் அகியுனோ, எதிர்காலத்தில் பிலிப்பைன்ஸை ஸ்திரமானதொரு நாடாக மாற்றுவாரா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**யோ.நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் சனத்தொகை 130 கோடி தொலைபேசி வைத்திருப்போர் 110 கோடி


சீனாவின் மக்கள் தொகை 130 கோடி ஆகும். இவர்களில் 110 கோடி பேரிடம் தொலைபேசி இருப்பதாகத் தெரியவந் துள்ளது.

தொலைபேசி வைத்திருப்பவர்களின் எண் ணிக்கை சீனாவில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த மே மாதம் வரையான 5 மாதங்களில் தொலைபேசி வைத்திருப்பவர்க ளின் எண்ணிக்கை 110 கோடியாகும்.

ஜனவரி முதல் மே மாதம் வரையிலான கால்ப் பகுதியில் 4 கோடியே 8 இலட்சம் தொலைபேசிகள் அதிகரித்துள்ளன. இந்தக் கால கட்டத்தில் நிலையான தொலைபேசி வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை 78 இலட்சம் குறைந்து 30 கோடியே 60 இலட் சம் ஆகவும் மொபைல் பயன்படுத்துபவர்க ளின் எண்ணிக்கை 4 கோடியே 85 இலட் சம் அதிகரித்து 79 கோடியே 60 இலட்சம் ஆனது.

இணையத்தளம் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 11 கோடியே 30 இலட்சம் ஆகும்.

# மனித நுரையீரலை செயற்கையாக உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள்



மனிதனின் நுரையீரலை செயற்கையாக உருவாக்கும் முயற்சியில் அமெரிக்காவில் ஏற் பல்கலைக்கழக விஞ்ஞா னிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக முதலில் எலியின் நுரையீ ரலை உருவாக் கும் முயற்சி யில் ஈடுபட் டனர்.எலி நுரையீரலின் செல்லை எடுத்து அதை வளரச்செய்து அதன் மூலம் நுரையீ ரலை உருவாக்கினார்கள்.

அது எலி நுரையீரல் போலவே திறம்பட செயற்பட் டது. ஆய்வகத்தில் வைத்து நடத்தப்பட்ட இந்தச் சோத னையில் சுவாசிக்கும் காற்றில் இருந்து நுரையீரல் ஓட்சிசன் மற்றும் கார்பன்டை ஆக்சை டை பிரிக்கும் வேலையை சரி யாக செய்தது.

அதில் ஓட்சிசனை இரத்தத் தில் உள்ள ஹீமோ குளோபி னில் சேர்க்கும் பணியையும் செய்தது. இந்த நுரையீரல் 215 நிமிடத்தில் இருந்து 120 நிமிடம் வரை சரியாக செயற்பட்டது.

இதே அடிப்படை யில் மனித நுரை யீரலையும் உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானி கள் ஈடுபட் டுள்ளனர்.

இதுபற்றி விஞ்ஞானி லாரா நிக்கல்சன் கூறும்போது, செயற்கை எலி நுரையீரல் வெற்றிகரமாக செயல்படுகி றது. இதை அடிப்படையாக வைத்து மனித நுரையீரலை உருவாக்க உள்ளோம்.

இதை உருவாக்கி பயன்பாட் டுக்குக் கொண்டு வர அதிக காலங்கள் ஆகும்.ஆனாலும் இது மருத்துவ முன்னேற்றமாக அமையும் என்றார்.

# கடல் மட்டம் உயர்வடைவதில் அந்தார்ட்டிக்காவின் பங்கு



கடல் மட்டம் உயர் வதில் அந்தார்ட்டிக்கா பனி உருகல் 10 சதவீத பங்களிப்பு செய்கிறதென பிரிட்டன் ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.

பைன் தீவு பனிம லைகள் உருகுவது மிக அதிகமான அளவில் கடல்மட்டம் உயர்வதில் பங்களிப்பு செய்வதாக வும் இந்த ஆய்வாளர் கள் கண்டுபிடித்துள்ள னர்.

பிரிட்டிஷ் அந்தார்ட்டிக்கா ஆய்வாளர்களின் கடல் நீருக்குஅடியில் செல்லும் ஒரு சிறப்பு வாய்ந்த வாகனம் கடலடி வரை சென்று இந்த ஆய்வுக்கான தரவுகளை திரட்டியுள்ளது.

அதாவது கடலடியில் 300 மீற்றர் உயர மலைமு கடு இருப்பதையும் கண்டு பிடித்துள்ளது.பைன் தீவு பனிமலை இந்த மலைமுகட்டின் மேல் இருந்தது.இது சமீப காலங்களில் மலைமுகட்டிலிருந்து தனியே பிரிந்துள்ளது. இதனால் நிலப்பகுதியிலிருந்து கட லுக்குள் பனி நகர்வது அதிகரித்துள்ளது.


பனிப்படலத்திற்கு அடியில் உள்ள கடல் கொதிநீர் பனிப்படுகையின் அடிப்பாகத்தை உருகச் செய் கிறது.இதனால் பனிப்படர்வு தொடர்ந்து உருகி வருகிறது.

இது குறித்து இந்த ஆய்வில் ஈடுபட்டு வரும் குழுவின் முன்னணி விஞ்ஞானி டாக்டர் அட்ரியன் ஜென்கின்ஸ் 'கடலடி மலைமுகட்டைக் கண்டுபி டித்ததால் சமீபத்திய வானிலை மாற்றம் இந்த பனி உருகுதலை சாத்தியப்படுத்துகிறதா அல்லது மேலும் அடிப்படையான மாற்றங்களால் கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகிறதா என்ற கேள்விகளை எழுப்பி யுள்ளது என்றரர்.

மேலும் கடலடி முகட்டிலிருந்து பைன் தீவு பனிமலை எப்படி பிரிந்தது என்று நமக்குத் தெரிய வில்லை என்று கூறிய அட்ரியன் இது 1970 ஆம் ஆண்டு நிகழத் தொடங்கியிருக்கலாம் என்று கணித்தி ருப்பதாகத் தெரிவித்தார்.

மேற்கு அந்தார்ட்டிக்கா பனிமலைகள் பரவலாக உருகி வருகின்றன. காரணங்களை ஆராய இந்த ஆய்வு பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# சூரிய குடும்பத்துக்கு வெளியே இளமையான கோள் கண்டுபிடிப்பு

சூரியக்குடும்பத்துக்கு வெளியே புதிய இளமையான கோள் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கோள் உருவாக்கம் பற்றிய விதிகளை இக்கோள் கேள்விக் குள்ளாக்கியிருக்கிறது.

சூரியனிலிருந்து சனிக் கிரகம் உள்ள தூரத்துக்கு சமமாக சூரியக்குடும்பத்துக்கு வெளியே 63.4 ஒளி ஆண்டு கள் தொலைவில் பெட்டா பிக் டோரிஸ் என்ற கோள் உள்ளது.

இது தன்மையில் சூரியனை ஒத்துள்ளது. இக்கோள் உரு வாகி ஒரு கோடி 20 இலட்சம் ஆண்டுகள் ஆகியிருக்கலா மென்று விஞ்ஞானிகள் கருது கின்றனர்.

ஆகவே, இளமையான கோளாக கருதப்படுகிறது. சூரி யனை ஒத்துள்ள இக்கோள், குறுகிய காலத்தில் இந்த வடி வத்தை பெற்றுள்ளது ஆனால், சூரியனின் வயதோ, 450 கோடி ஆண்டுகள், பெட்டா 2003 இல் கண்டுபிடிக்கப் பட்டது. 2009 இல் அது ஒரு கோள்தான், நட்சத்திரமல்ல என்று உறுதி செய்யப்பட்டது.

பெட்டா பிக்டோரிஸ் கோளுக்கு அருகில் அதன் துணைக்கோளாக சுற்றி வரும் ஒரு கோளை விஞ்ஞானி கள், தென் ஐரோப்பிய வானி யல் கூடத்தின் மிகப்பெரிய டெலஸ்கோப் மூலம், கடந்த ஆண்டில் கண்டறிந்தனர்.

இந்த கோளுக்கு பெட்டா பிக்டோரிஸ் பி என்று பெய ரிட்டுள்ளனர். பொதுவாக ஒருகோள், முழுமையான வடிவத்துடன், கோளுக்கேயு ரிய தன்மைகளை பெறுவதற்கு குறைந்தபட்சம் ஒரு கோடி ஆண்டுகளாகும் என்று அறிவி யல் விதிகள் கூறுகின்றன.

பி.டி.20 1790 பி என்ற கோள், மிகக் குறைந்தபட்ச மாக 30 கோடியே 50 இலட்சம் ஆண்டுகளில் உருவானதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், வெட்டா பிக்டோரிஸ் பி உருவாகி, சில இலட்சம் ஆண்டுகளே ஆகியிருக்கு மென்று தெரியவந்துள்ளது. இக்கோள், வியாழனை விட ஒன்பது மடங்கு பெரியது என் பது குறிப்பிடத்தக்கது.

சூரியக்குடும்பத்துக்கு வெளியே, இப்போதைக்கு மிக இளமையான கோள் இதுதான் என்று விஞ்ஞானிகள் கருது கின்றனர்.

# பசுமை குடில் வாயு வெளியேற்றத்தை ஆராயத் தனிச்செயற்கைக்கோள்

பசுமை குடில் வாயுவையும் அதன் வெளியேற்றத்தினால் ஏற்படும் பாதிப்பையும் ஆராய்ந் தறியத் தனிச் செயற்கைக் கோளை அனுப்ப இந்திய வானி யல் ஆய்வு மையமான இஸ்ரோ முடிவு செய்துள்ளது.

பசுமை வாயுக்கள் எனப்படும் கரியமில வாயு,கார்பன் மோனாக் சைட்,நைட்ரிக் ஒக்ஸைட் உள் ளிட்ட வானிலை மாற்றத்திற்குக் காரணமாகக் கூறப்படும் வெப்ப வாயுக்கள் குறித்தும் அவைக ளின் வெளியேற்றத்தினால் ஏற்படும் பாதிப்பை ஆராயவும் அதற்கென்றுத் தனிச் செயற் கைக்கோள் ஒன்றை அடுத்த மூன்று ஆண்டுகளில் அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

பசுமை வாயு ஆய்விற்கான செயற்கைக்கோள் தற்போது வடி வமைக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்திற்கான நிதியுதவியை மத்திய அரசின் சுற்றுச்சூழல் வனத்துறை வழங்கவுள்ளது.

அமெரிக்காவும் ஜப்பானும் இவ்வாறான செயற்கைக் கோளை விண்ணில் ஏற்கனவே செலுத்தியுள்ளன என்பது குறிப் பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# இவனும் காதலன்தான்!

'அளம்பில் மகன்'



அதிகரித்திருந்த வேலையின் நிமித்தம் தேநீர் இடைவேளைக்குக் கூட போகமுடியாமல் பணியில் மூழ்கிப் போனான் ரமேஷ். இருநாட்களில் செய்து கொடுக்க வேண்டிய கோவைகளில் தான் அவனது முழுக்கவனமும் பொதிந்து போய்க் கிடந்தது. பெரிய புரெஜெக்ற் ஒன்றுக்காக அலுவலகத்தில் இவனையே தெரிவு செய்து பொறுப்பை ஒப்படைத்திருந்தார் மேலதிகாரி. ஏனெனில் இவனுடைய நேர்மை கடமையில் காட்டும் அக்கறை என்பனவே அனைவரிலும் பார்க்க ரமேஷை உயர்வாக காட்டக் காரணமாகின. கொடுக்கும் வேலையை முகங்கோணாமல் செய்து முடிக்கும் திறமை அதிகமாகவே அவனிடம் காணப்பட்டது. அதனால் முக்கியமான வேலைகளை ரமேஷிடம் தான் எம்.டி. அதிகமாக கொடுப்பது வழக்கம்.

'ஹலோ ரமேஷ்! என்ன ...ரீ குடிக்கிறதை மறந்து போயாச்சா..' எதிரே மானஷீகா வந்து கேட்ட போதுதான் கணினியில் மூழ்கிக் கிடந்தவன் தவநிஷ்டை கலைந்த தவ்சியாக நிமிர்ந்தான் .

'என்னங்க...உங்களை மாதிரி சின்சியரான இந்தளவுக்கு உழைக்கிற ஸ்டாவை இதுவரை நான் பார்த்ததே கிடையாதுப்பா.. என்னவொரு தொழில் பக்தி...' அவள் வழமையான பாணியில் சொல்லிவிட்டு கிண்டலாகச் சிரித்தாள். லேசாக புன்னகைத்தவன், 'மானஷி...நீங்க நேரத்தை கடத்துறதுக்காகத்தான் வேலைக்கு வந்தீங்க. ஆனால் நான் அப்படியில்லையே! என்னோட குடும்ப வாழ்க்கையை நடத்துறதுக்காக வேலை செய்யுறேன். நீங்க இந்த ஜொப் போனால் வீட்டில் இருக்கலாம். இந்த வேலை போய்ட்டா நானும் என்னோட குடும்பமும் பிச்சைதான் எடுக்கணும். ஏன்னா நாங்க ஏழைங்க...'

'அப்பப்பா போதுங்க உங்க புராணம். ஏதோ தவறிப்போய் சொல்லிட்டேன். மன்னிச்சிக்குங்க... சரி! அது போகட்டும். நாளைக்கு என் அப்பாவோட திதி. நம்ம கூட வொர்க் பண்ணுறவங்க எல்லோரையும் என் வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கேன். நீங்களும் கண்டிப்பா வரணும். நாளைக்கு உங்ககிட்ட முக்கியமான ஒரு மேட்டர் பேசணும். ரமேஷ்! கண்டிப்பா வரணும்' சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இவனும் இது வழமைதானே...என்றபடியால் மீண்டும் தன்பணியிலேயே நுழைந்து கொண்டான்

ரமேஷ்! கண்பார்வை இழந்த தந்தை. உழைத்து உழைத்தே நொந்து போன வயதான தாய். திருமண வயதில் இரு தங்கைகள் சாதாரணதரத்தில் படிக்கும் தம்பியென...சாதாரண ஒரு ஏழைக் குடும்பத்தில் மூத்த பிள்ளையாக ஜனனமானவன். தாய் சிந்திய வியர்வைத் துளிகளின் பிரகாரம் உயர்தரம் வரை படித்து பல்கலைக்கழக நுழைவு கிடைக்காது போகவே கல்வியியற் கல்லூரியில் கல்வியை முடித்தான். அவனின் கல்விக்கு பணமாகியவை அந்த ஏழைத்தாயின் உதிரத் துளிகளே! தொழில் தேடிக்கொண்டிருந்தபோது அவனது திறமையைக் கண்டு ஒரு தனியார் நிறுவனம் தொழில் வாய்ப்பை வழங்கியது. தன் குடும்பத்தை இனிமேலும் தாயாரின் நோயுற்ற உடலினால் தாங்க முடியாது என்பதை புரிந்து கொண்டு... தன் சகோதரர்களின் எதிர்காலத்தையும் நினைத்து வேலையில் சீக்கிரமாகவே இணைந்து கொண்டு படிப்படியாக பதவியுயர்வுகளைப் பெற்று இன்று குடும்பத்தை ஓரளவு உயர்த்தி விட்டான். பொருளாதாரம் ஓரளவு சுமுகமாக நகர்ந்து கொண்டிருந்தது. ஐந்து ஜீவன்களையும் இவனது உழைப்பே தாங்கிக் கொண்டிருந்தது. இறைவனால் ஏழைகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதுதான் வறுமை. அதைப் போக்க எத்தனை போராட்டங்களும் பிரச்சினைகளும்! ஒரு சாதாரண இளைஞனாக ரமேஷால் வாழ முடியவில்லை. பொறுப்பு எனும் சுகமான சுமை அவனது தோளிலே சுமக்கப்பட்டுக் கொண்டிருக்கிறதே!

மறுநாள் தன்னிடம் வழங்கப்பட்டிருந்த வேலையை முடித்துக் கொடுத்து விட்டு மாலை மானஷீகாவின் அழைப்பின் பேரில் அவளது வீட்டை அடைந்தான். பூஜைகள், உபசரிப்புகள் நடந்து முடிந்து அனைவரும் புறப்படத் தொடங்கிய போது...இவனும் விடைபெற எத்தனிக்க 'ஏம்பா ரமேஷ்! பேச வேண்டிய விசயமே பேசலை, அதுக்குள்ள புறப்படப்போறியேப்பா... இப்படி இருப்பா! உங்கிட்ட முக்கியமான விசயம் பேசணும்' அவளது தாயார் இவனை அமர்த்தினார்.

மானஷீகாவும் அருகில் அமர்ந்து கொண்டாள்.

'ரமேஷ்! சுத்திவளைச்சுப் பேசாமல் விசயத்துக்கு வர்றேன். என்னோட பையன் வெளியிலிருந்து வரப்போறான். கையோட அவனுக்கு ஒரு கல்யாணத்தை பண்ணிடப்போறேன். அதுக்காக பொண்ணு பார்க்கத் தொடங்கிய போதுதான் மானஷி உங்க தங்கைங்க இருக்கிறதை சொன்னா. உங்க குடும்பத்தைப் பத்தியும் உன்னைப் பத்தியும் நிறையவே சொன்னாப்பா... நீ விரும்பினால் உன் ஒரு தங்கச்சியை என் மகனுக்கு மனைவியாக்கிகோ எனக்கும் மருமகளாக்கிறேன். என்னப்பா சொல்லு...!' ரமேஷ் சிறிது நேரம் மௌனமாகினான்.

'என்னங்க ரமேஷ் ... விரும்பலையா நீங்க...' அவளின் புன்னகையோடு மௌனம் கலைந்தான்.

'அம்மா! எனக்கு விருப்பம்தான். ஆனால்...' 'என்னப்பா சீதனமா? உன் குடும்பம் எப்படின்னு தெரிஞ்சுதான் பொண்ணே கேட்டேன். விலைமதிக்க முடியாத சொத்தா... சீதனமா உன் தங்கை இருக்கும்போது.... எதுக்குப்பா வெறும் பணம், காசு... நீ உன் தங்கையை மட்டும் தந்தா போதும்' அவனை சம்மதம் கேட்டு நோக்கினார் தாய் மகேஸ்வரி 'அம்மா எனக்கு சம்மதம். என் தங்கைக்கு என்னால முடிஞ்சதை செய்வேன். ஆனால் இது சம்மதமாக என்னோட அப்பா அம்மாகிட்ட பேசிட்டு ஒரு நல்ல முடிவாய் சொல்றேன்...' மானஷீகா தன் தாயை தோள்களால் தட்டினாள்.

'ரமேஷ் இன்னொன்று ... மானஷி உன்னை விரும்புகிறாளாம். அவ காதலை சொல்ல நான் தான் வேணுமாம்... இது எனக்குத் தெரியாது. நீங்க ரெண்டு பேருமாச்சு...' அவன் ஒரு புன்னகையோடு விடைபெற்று எழுந்தான். அவளது காதலை எப்போதோ கண்டுகொண்டவன்தானே ரமேஷ்!

தன் குடும்பம் ஒரு நல்ல நிலை பெறும் வரை... காதலை மனதினுள்ளே மூடிக் கொண்டு மௌனமாக சிரித்துக் கொண்டு வாழ்கிறான் அவன். நிச்சயம் அவன் வாழ்வில் மனைவியென்றால் மானஷீகா தான்!

---

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களால் முடியும் பெண்கள்!

அடுப்படியிலிருந்தும்
அகிலத்தையே ஆட்டுவிக்க
ஆணைகளை பிறப்பிக்க
ஆடுபவரை அடக்கிவிட
உங்களால் முடியும்
பெண்களே உங்களால் முடியும்!!

உங்களை வதைக்கும்
ஊனமான சமுதாயத்தையும்
கண்டபடி தூற்றும்
உணர்வில்லா வாய்களையும்
ஊசியாகி தைத்துவிட
உங்களால் முடியும்
பெண்களே உங்களால் முடியும்!!

அடக்க நினைக்கும்
அத்தனை வர்க்கத்தையும்
மடக்க நினைக்கும்
மலிந்து போன காமுகர்களையும்
ஒட்டுத் துணியின்றி
ஓடிப்போக வைக்க
உங்களால் முடியும்
பெண்களே உங்களால் முடியும்!!

படுக்கைக்கு மட்டுமே
பயன்படுத்தும் கணவனையும்
வேலைக்காரியாக்கி உம்மை
வேதனை செய்யும் மாமியாரையும்
திடுக்கிட்டு திக்குமுக்காட வைக்க
உங்களால் முடியும்
பெண்களே உங்களால் முடியும்!!

சிரித்துப் பேசினால்
சீரழிந்தவளென்று கூறும்
சில்லறைத் தனமானவர்களையும்
திரும்பக் கேட்டால்
திமிர்பிடித்தவளென பழிக்கும்
திருந்தாத ஜென்மங்களையும்
எதுவுமே பேச முடியாமல் செய்ய
உங்களால் முடியும்
பெண்களே உங்களால் முடியும்!!

உங்களின்
வாழ்க்கைப் பாவை
உங்களிடமே இருக்கிறது
தவறாமல் காத்துக் கொள்வதும்
தவறவிட்டு சிதைத்து விடுவதும்
உங்கள் கைகளிலே தான்
பெண்களே உங்களிடமே தான்!!

**இராமசர்மி ரமேஷ்,**
**அளம்பில்.**




## நாட்டியமாடும் கவிதை

இரக்கமற்ற ஈசனே-நீ
படைத்துக் கொல்லும் கடவுள்
தான்
அந்தவோர் பேரழகை
நீ படைத்து-இந்தச்
சிறு உயிரைக் கொல்கிறாயே
பார்க்கிறாள்
ஓர் முறை -நான் கண்டால்
தோழியின் பால்
பூமுகம் காட்டி
நடிக்கின்றாள்.
ஏதேதோ சொல்கிறாள்
பார்க்கிறாள்
மற்றோர் முறையும்- அமுதவா
சல் மெல்ல
திறந்து இளமொட்டு
புன்னகைக்கின்றாள்
அழைக்கிறாள்
நம்மையென நான்
நெருங்கினால்
வெட்டுக்கிளி தன் மதிவதனம்
வெட்டுகிறாள்
ஓர் கவிதை
ஆடும் நடனம் புரியாமல்
வெம்புகிறான் இந்த
ரசிகன்

**அக்கரையூர் கிரிஜா**

## உண்மைக் காதல்

கண்களின் பார்வையிலும்
உதடுகளின் வார்த்தையிலும்
வருவதில்லை உண்மைக்காதல்
உள்ளங்களின் எண்ணவலைகளிலும்
உணர்ச்சிகளின் பரிமாறலிலும்
தோன்றுமடி உண்மைக்காதல்- உனக்கு
இதை புரிந்து கொள்ள எடுத்ததோ
இத்தனை காலம்-நீ
புரிந்த பின் என்னவளே!
ஏன்?உன்னுள் இத்தனை மௌனம்

**சாந்தசொரூபன் சுகாகரன்,**
**வ/தமிழ் மத்திய**
**மகாவித்தியாலயம்.**

## கற்பு

கண்ணகி திரௌபதி வாழ்ந்தகாலம்
தான் அன்றே வாழ்ந்திருக்க
வேண்டுமையா!
சீதைகள் இல்லை இங்கே
சிலுக்குகள் ஏராளம்
கற்பு உறுதி சொன்னாள்- உலகுக்கு
தைரியமாய் அம்மிமிதித்து அக்கால‌ப்
பெண்மணி
கற்பு உறுதி சொன்னாள் -உலகுக்கு
விம்மி விம்மி கழிமித்து இக்காலப்
பெண்மணி

**சந்திவெளி சந்திதாசன்.**

பட்டம் விடும் பாலகர்கள்
இவர்கள்
பட்டத்தை ஆக்கி வான வாழ்வில்
வரும் சவால்களை சமாளிக்க
உறுதியாய் மனம் அறுதியாய்
பட்டம் மட்டும் உயர பறக்க
பாலகராய் கீழிருந்து
பார்த்து மகிழும்
பாரபட்சமற்றவர்கள் ஆசான்கள்

தாய்க்கு நிகராக
தந்தைக்கும் ஒப்பாக
மரத்துக்கு வேராக

மனதுக்கு உரமாக
எவர் எவர் வாழ்வுக்கோ
பாதை சொல்லும்
பகவான்கள் இவர்கள்

தடுக்கி விழும் பருவத்தே
குறும்பாய் குதித்தோடும்
பருவத்தே
கால்போன போக்கில்
சென்று விடும்
பருவத்தே
கால பருவத்தால்
கால் தவறும்
வேளையிலும்
கண் இமையாய்
பாதுகாக்க

பூசனியை பின்
தொடரும்
கொடி போல
தொடர்பவர்கள்
ஆசான்கள்

இருள் அகற்றி
ஒளி கொடுக்கும்
சூரியனுக்கு இணையான
ஆசான்களின் ஒளி பட்டு
ஆயிரமாயிரம் தீபங்கள்
அணையாமல்
ஒளிரட்டும்.

**பா.ரிசாந்தன்**
**ஹொப்டன்.**

## என் கனவு தேவதை

வீணாகவில்லை மறைந்த காலம்
துளிர்விட்டு நிற்கிறது...
என் இளமை
சிறுமையில் பார்த்த
ஓர் பெண்ணவளின்
எழில் முகம்...
கண்டு
இருபது முடிந்தும் அதேமுகம்
இப்போது கன்னியாக
அவள் ஒரு கனவு தேவதை
என் நினைவிலும்
கூட...
இயற்கையின் அழகை
இயற்கையாக படைத்துவிட்டான்
பிரம்மன்
பெண்ணுடலாய்
அவளின்
அன்னலிடை காண
என் விழிகளை
அகல விழித்து காத்திருப்பேன்
அறுபது ஆகும்வரை

**பி.திமோதிஸ்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15.
என்றும் நேசிக்கும்
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சிக்கு ஓய்வளிக்கலாமா?

நோயற்ற வாழ்வு என்னும் குறைவற்ற செல்வத்தைப் பெறுவது இப்போது மிகவும் அரிதாகி விட்டது. சத்தில்லா உணவு, சுகாதாரமற்ற வாழ்விடம் எனப் பல்வேறு காரணங்களுக்கிடையே ஆரோக்கியமற்ற வாழ்வுக்கு உடற்பயிற்சிப் புறக்கணிப்பும் முக்கிய காரணம்.

'வாழ்நாள் முழுவதும் மருத்துவரிடம் செல்லாமல் இருக்க ஒரு மருந்து சொல்லுங்கள்' என்றால் உடனே உடற்பயிற்சி என்று சொல்லி விடலாம். ஆனால், கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பதைப் போல நோய்களின் ஆதிக்கம் உடலில் அரங்கேறிய பின்புதான் கசக்கும் மருந்துகளுடன் வியர்க்கும் உடற்பயிற்சியின் பக்கம் தங்கள் பார்வையைத் திருப்புகிறார்கள் பலர்.

சில பத்தாண்டுகளுக்கு முன்பு வரை உடற்பயிற்சிக்காகத் தனியாக நேரம் ஒதுக்க வேண்டியதில்லை.

ஏனென்றால், எந்திரங்களின் பயன்பாடு குறைந்திருந்த அந்தக் காலத்தில் தொழில் முதல் விவசாயம் வரை அனைத்துக்கும் உடல் உழைப்பே பிரதானம். உணவுக்காக உழைக்கும் போதே உடற்பயிற்சியும் கிடைக்கப்பெற்று ஆரோக்கியம் பெருகியது.

ஆறுகளின் தேன்சுவை நீருக்கும் தென்றல் உறவாடும் காற்றுக்கும் இப்போதைய நகரங்களில் கூட அன்று தட்டுப்பாடில்லை. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தாமல் எந்த வேலையையும் முடிக்க முடியாது என்பதால் உடலும் அதற்கேற்ப வளைக்கப்பட்டது.

இதனுடன் 'வீரம்' என்னும் போதையூட்டி இளைஞர்களுக்கு சிலம்பம், வாள்வீச்சு போன்ற வழிகளிலும் உடல் மேலும் வலுவூட்டப்பட்டது. சில பகுதிகளில் பல கிலோ எடை கொண்ட 'திருமண கல்' என்ற கல்லைத் தூக்கிப் போட்டால் மட்டுமே பெண் கொடுக்கும் வழக்கம் கூட இருந்தது.





காலத்தின் வேகத்தில் அறிவியல் கடவுளின் வரத்தால் ஏராளமான இயந்திரங்கள் பெருகிவிட்டன. இன்று படுக்கையில் இருந்தபடியே வீட்டுக் கதவுகளை 'ரிமோட் கன்ட்ரோல்' மூலம் திறந்து மூடும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் உடற்பயிற்சி வெகு தூரத்துக்குச் சென்றுவிட்டது.

கணினியோடு உறவாடி உழைக்கும் இன்றைய பல இளைஞர்களின் கைகள் கூட மகளிரைப் போல மென்மையாகிவிட்டது என்பதே உண்மை.

கருப்பட்டியையும் கம்பஞ் சோற்றையும் அருங்காட்சியகத்தில் இருக்கும் உணவுப் பொருளாகப் புறந்தள்ளிவிட்டு, துரித உணவுகளால் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் இளைஞர்களை உடல் பருமனும் நோய்களும் எட்டிப்பிடிப்பது எளிதாகி வருகிறது.

இராணுவம், பொலிஸ் போன்ற பணிகளுக்குச் சென்றால் மட்டுமே கட்டான உடல் வாகு தேவை என்பதும் படிப்பு, பணிகளுக்காக உடற்பயிற்சியை மறப்பதும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது.

பொலிவான முகத் தோற்றத்துக்காகப் பல வித 'க்ரீம்'களை வாங்க பணத்தில் தாராளம் காட்டும் வேளையில் உடலை மிடுக்காக்கி ஆரோக்கியத்தைப் பரிசளிக்கும் உடற்பயிற்சிகளுக்காகச் செலவிட மட்டும் தயக்கம் காட்டுவது தவறானதாகும்.

இளைஞர்கள் உடற்பயிற்சிக்கு ஓய்வளிக்கும் போக்கு உகந்ததல்ல. உடற்பயிற்சியின் உன்னதத்தை சிறுவயது வகுப்புகளிலேயே அறிந்திருந்தும் அதன் பக்கம் புறமுதுகிடுவதால்தான் ஆரோக்கியத்துக்காக மருந்தகங்களில் காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தொடக்கப் பள்ளிகள் முதல் மேல்நிலைக் கல்வி வரை வாரத்தில் ஒருசில மணிநேரம் மட்டுமே விளையாட்டுப் பாடவேளையாக உள்ளது. இந்நேரத்திலும் சில ஆசிரியர்கள் தமது பாடத்தைப் படிக்க இரகசிய உத்தரவுகளைப் பிறப்பிப்பதும் உண்டு.

அனைத்து மாணவர்களும் ஏதேனும் ஒரு விளையாட்டு அணியில் கட்டாயம் இடம் பெற்றிருக்கவேண்டும் என்று வற்புறுத்தல் இல்லை. இதனால் விளையாட்டுப் பாடவேளையை வெட்டிக்கதை நேரமாக மைதானத்தில் மண்ணில் கோலமிட்டுக் கழிக்கும் மாணவர்கள் ஏராளம்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பர். அந்தப் பழமொழிக்கு ஏற்ப பள்ளிப் பருவத்திலேயே விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்குத் தினந்தோறும் மாலை இறுதி பாடவேளையை விளையாட்டுக்காக ஒதுக்கவேண்டும். இந்த நேரத்தில் சிலம்பம், அந்நிய நாட்டு வரவான கராத்தே உட்பட உடற்பயிற்சியோடு தொடர்புடைய வீர விளையாட்டுகளைச் சேர்ப்பது தவறில்லை.

அரசுப் பணிகளில் சேருவதற்கு விளையாட்டுச் சான்றிதழ்களின் அவசியத்தை அதிகப்படுத்தவேண்டும். உடற்பயிற்சி குறித்த விழிப்புணர்வு ஏற்பட சுகாதாரத் துறையினர் புதிய யுக்திகளைச் சிந்தித்து செயல்படுத்த வேண்டும்.

அரசு, இளைஞர்களிடம் உடற்பயிற்சி மோகத்தைத் தூண்ட அனைத்து ஊர்களிலும் பல்வேறு வசதிகள் கொண்ட நவீன உடற்பயிற்சிக் கூடங்களைக் குறைந்த கட்டணத்தில் திறக்கப் புதிய திட்டத்தை உருவாக்குவது அவசியம்.

வருங்கால இளைஞர்கள் வலுவானவர்களாக மாறினால் தான் நாட்டின் ஏற்றம் எளிதாகும் என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியாததல்ல.

கோ.முத்துக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோலடித்து சாதிப்பேன்'

'ஜேர்மனிக்கு எதிரான இன்றைய காலிறுதியில் கோலடித்துச் சாதிப்பேன்' என ஆர்ஜென்ரீனா வீரர் லயோனல் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்ற 32 அணிகளில் 24 அணிகள் வெளியேறிவிட்டன. காலிறுதிக்கான போட்டியில் ஆர்ஜென்ரீனா, ஜேர்மனி, பிரேஸில் உள்ளிட்ட எட்டு அணிகள் பங்கேற்கின்றன. தவிர, இத்தொடரில் அதிகம் எதிர்பார்க்கப்பட்ட வீரர்களில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸியும் ஒருவர்.

யாரும் எதிர்பார்க்காத நிலையில் இந்த அணியின் ஹிகுவேன் 4 கோல்கள் அடித்து 'கோல்டன் ஷூ' கைப்பற்றும் போட்டியிலுள்ளார். ஆனால், இதுவரை நான்கு போட்டிகளில் பங்கேற்றும் இன்னும் தனது கோல் கணக்கைத் தொடங்காமல் உள்ளார் மெஸ்ஸி. இது குறித்து அவர் கூறியதாவது;

போட்டிகளில் பலமுறை கோல் கம்பத்தை நோக்கி அடித்துள்ளேன். ஆனால், எனக்கு அதிர்ஷ்டமில்லை என்றுதான் கூற வேண்டும். மெக்ஸிக்கோவுக்கு எதிராக எப்படியும் கோலடித்துவிடலாமென்றிருந்தேன். ஆனால், அதுவும் முடியவில்லை. இத்தொடரில் இன்னும் ஒரு சில போட்டிகளில் பங்கேற்கலாம் என்ற நம்பிக்கையுள்ளது.

காலிறுதியில் நாங்கள் சந்திக்கவுள்ள ஜேர்மனி பெரிய அணி என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதிர்ஷ்டம் சற்று கைகொடுத்து முதல் பாதியில் எப்படியும் இரண்டு கோல்கள் அடித்துவிட்டால் அப்புறம் போட்டியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிடலாம்.

ஜேர்மனி வீரர்களுடன் சமீபத்தில் பலமுறை நட்பு ரீதியிலான போட்டிகளில் பங்கேற்றுள்ளோம். இதனால் இரு பக்கத்திலும் உள்ள வீரர்களின் பலம், பலவீனம் குறித்து ஒவ்வொருவருக்கும் நன்றாகத் தெரியும். இந்நிலையில், காலிறுதியில் மோதவுள்ளது சற்றுக் கடினமே. இருப்பினும் ஜேர்மனிக்கு எதிரான போட்டியில் ஒரு கோலடித்துவிடலாமென முயற்சித்து வருவதாகவும் கூறினார்.



# மெஸ்ஸியை சமாளிப்பது எப்படி

முந்தைய உலகக் கிண்ண கால்பந்து காலிறுதியில் பெனால்ட்டி மூலம் ஆர்ஜென்ரீனாவை ஜேர்மனி வீழ்த்தியிருந்தாலும் அந்த ஆர்ஜென்ரீனா அணிக்கும் தற்போதைய அணிக்குமுள்ள மிகப்பெரிய வித்தியாசம் லயன் என்று அழைக்கப்படும் ஆர்னெஜ்ரீனா நட்சத்திரம் லயோனல் மெஸ்ஸி என்பதனை ஜேர்மனி இனங்கண்டுள்ளது.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் இவரது அபார ஆட்டம் ஆர்ஜென்ரீனாவை காலிறுதியாட்டம் வரை அழைத்து வந்துள்ளதை அனைவருமே அறிவர். இன்று சனிக்கிழமை ஆர்ஜென்ரீனாவும் ஜேர்மனியும் கேப்டவுனில் காலிறுதியில் சந்திக்கின்றன.

உலகின் சிறந்த வீரரான மெஸ்சியைக் கட்டுப்படுத்த ஒட்டுமொத்த கூட்டுறவு தேவையென்று ஜேர்மனி நடுக்கள வீரர் சமி கேதிரா தெரிவித்துள்ளார்.

போட்டி முழுவதும் அவரை தடுத்து நிறுத்துவதென்பது முடியாத காரியமென்பதும் ஜேர்மனி அணி கருதுகிறது.

ஜேர்மனியின் நட்சத்திர வீரர் மிரோஸ்லாவ் குளோஸ் தனது 100 ஆவது சர்வதேச போட்டியை இன்று விளையாடவுள்ளார். அவர் அர்ஜென்ரீனா பற்றி கூறுகையில்; '2006 உலகக்கிண்ணத் தோல்விக்கு அவர்கள் நிச்சயம் பழி வாங்கத்துடிப்பார்கள். இப்போது அந்த அணி வித்தியாசமான அணி ஆனால், அப்போது மெஸ்ஸி பெஞ்சில் அமர்ந்திருந்தார்' என்றார்.

'ஆனால், ஒரு அணியாக களத்தில் எவ்வாறு ஆடுகிறோம் என்பதுதான் முக்கியம்' என்கிறார் குளோஸ்.

எங்களிடம் 2006 காலிறுதி முடிவை மீண்டும் செய்யும் திறமையும் இளமையும் அனுபவமும் உள்ளது என்று குளோஸ் மேலும் தெரிவித்தார்.

மற்றொரு சிறந்த ஜேர்மனி வீரரான முல்லர் ஆர்ஜென்ரீனாவின் பாதுகாப்பு அரண் பலவீனத்தை தங்களுக்கு சாதகமாக்குவோம் என்று கூறியுள்ளார்.




# ஐ.பி.எல். தலைவருக்கு ஆயுட்காலத் தடை

ஐ.பி.எல். அமைப்பின் தலைவர் மற்றும் ஆணையாளராக இருந்த லலித்மோடிக்கு ஆயுட்காலத் தடை விதிக்க இந்தியக் கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இன்று 3 ஆம் திகதி இந்தியக் கிரிக்கெட் சபையின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடக்கிறது. இதில் இது குறித்து முடிவு செய்யப்படும்.

லலித்மோடி பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து அவர் இடைநிறுத்தப்பட்டார். இது தொடர்பாக அவருக்கு கிரிக்கெட் சபை நோட்டீஸ் அனுப்பியது. இதற்கு அவரளித்த விளக்கம் கிரிக்கெட் சபைக்கும் திருப்தியளிக்கவில்லை.

இதைத் தொடர்ந்து லலித் மோடியை முற்றிலும் ஐ.பி.எல். அமைப்பிலிருந்து கழற்றி விட முடிவு செய்துள்ளது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் இன்று 3 ஆம் திகதி நடக்கிறது. இந்தக் கூட்டத்தில் லலித்மோடியின் தலைவிதி முடிவு செய்யப்படும். இடைநிறுத்தப்பட்ட அவர் நீக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லலித்மோடி பல்வேறு முறைகேடுகளை செய்துள்ளதை ஐ.பி.எல். அமைப்பிலுள்ள உறுப்பினர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர் நீக்கப்படுவது உறுதியாகிவிட்டது.

ஐ.பி.எல். அமைப்பின் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இந்தக் கூட்டத்தில் மோடி விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த ஐ.பி.எல். போட்டியின் போது லலித்மோடியின் டாக்சி கட்டணம் மட்டும் 40 இலட்சம் ரூபா ஆகும். போட்டி நடக்கும் இடங்களுக்கு அவர் விலை உயர்ந்த மெர்சிடஸ் பென்ஸ் அல்லது பி.எம்.டபிள்யூ. காரில் தான் சென்றுள்ளார். இதனால் அவர் காரில் சென்றதற்கும் மட்டும் 40 இலட்சம் ஆகியுள்ளது.



# ஜப்பான் பயிற்சியாளர் விலகுவார்?

உலகக் கிண்ணத்தொடரில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து ஜப்பான் அணியின் பயிற்சியாளர் டகேஷி ஒகாடோ பதவி விலகவுள்ளதாகத் தெரிகிறது.

தென்னாபிரிக்காவில் நடக்கும் உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் ஆசிய அணியான ஜப்பான், வியக்கத்தக்க வகையில் விளையாடியது. முதன் முறையாக காலிறுதிக்கு முன்னேற வாய்ப்பிருந்தது. இந்நிலையில் 'ரவுண்ட்-16' போட்டியில் பாராகுவேயிடம் கடைசி வரை போராடிய ஜப்பான் 'பெனால்டி ஷூட் அவுட்' முறையில் வெளியேறியது. இதையடுத்து அணியின் பயிற்சியாளர் டகேஷி ஒகாடோ பதவி விலகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது குறித்து அவர் கூறியதாவது;

பராகுவே அணிக்கெதிராகப் போதியளவில் திறமை வெளிப்படுத்தவில்லை என்பது தான் உண்மை. தற்போது போட்டியில் என்ன நடந்தது என்பது குறித்து விவாதித்து வருகிறேன். இது குறித்து மேலும் விளக்கம் தரப்போவதில்லை.

போட்டியின் போது அதிக தற்காப்பு முறையில் விளையாடியதாகக் குற்றம் சுமத்துவது தவறு. மாற்று வீரர்களைக் களமிறக்கியது உட்பட அவ்வப்போது செய்த மாற்றங்கள் எல்லாம் எப்படியும் கோலடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் ஒரு கோல் கூட அடிக்கமுடியாமல் போவது வருத்தம் தான்.

இருப்பினும் தலைமைப் பயிற்சியாளர் என்ற முறையில் அணியின் வெற்றிக்குக் கூடுதல் முயற்சி எடுத்திருக்கவேண்டும். இருப்பினும் தோல்விக்குப் பொறுப்பேற்கிறேன். ஆனால் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகுவது குறித்து இப்போதைக்கு எதுவும் நினைக்கவில்லையென்றும் டகேஷி ஒகாடோ கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிபாவின் சிறந்த வீரர்

1974 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியின் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டவர் நெதர்லாந்து அணியின் முன்னாள் கால்பந்து வீரர் ஜோஹன் குருயுப். இவர் 1947 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி நெதர்லாந்தின் ஆம்ஸ்ரடாமில் பிறந்தார். இளம் வயதிலேயே கால்பந்தால் கவர்ந்திழுக்கப்பட்ட ஜோஹன், தனது 14 வயதில் அஜாஸ் கிளப்பிற்காக விளையாட ஆரம்பித்தார். அந்த அணிக்காகப் பல்வேறு போட்டிகளில் சிறப்பாக விளையாடியதன் மூலம் நெதர்லாந்து தேசிய அணியில் 1966 ஆம் ஆண்டு இடம்பிடித்தார்.

1974 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் பங்கேற்ற நெதர்லாந்து அணியில் ஜோஹனும் இடம்பெற்றிருந்தார். அந்த உலகக் கிண்ணத்தில் அனைத்துப் போட்டிகளிலும் ஜோஹன் அபாரமாக ஆடினார். நெதர்லாந்து அணி இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

பலம் வாய்ந்த பிரேஸில், ஆர்ஜென்ரீனா, மேற்கு ஜேர்மனி அணிகளுக்கு எதிராக அபாரமாக ஆடிக் கடும் சவாலை அளித்ததோடு உலகக் கிண்ணத்தில் சிறந்த வீரராக ஜோஹன் தேர்வு செய்யப்பட்டார். நெதர்லாந்து தேசிய அணிக்காக 11 ஆண்டுகள் விளையாடிய இவர் 48 போட்டிகளில் 33 கோல்கள் அடித்துள்ளார்.

அஜாக்ஸ், பார்சிலோனா, லொஸ் ஏஞ்சல்ஸ், வாஷிங்டன் டிப்ளோமேட்ஸ், லீவன்டே, பெயினூர்ட் கிளப் அணிகளுக்காக 520 போட்டிகளில் விளையாடியுள்ள ஜோஹன் 291 கோல்கள் அடித்துள்ளார்.

1984 இல் கால்பந்திலிருந்து ஓய்வுபெற்ற பிறகு அஜாக்ஸ், பார்சிலோனா, கேட்டலோனிய கிளப்புகளுக்கு முகாமையாளராக இருந்துள்ளார். தற்போது நெதர்லாந்து அணியின் முகாமையாளராகவுள்ளார்.

3 முறை ஐரோப்பாவின் சிறந்த கால்பந்து வீரர் 1984 உலகக் கிண்ணத்தின் தங்கப்பந்து விருது, நெதர்லாந்தின் தங்க ஷூ விருது, 1987 ஆம் ஆண்டின் சிறந்த அணி முகாமையாளர் விருது, 20 ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த ஐரோப்பிய விருது, நெதர்லாந்தின் நம்பர் 1 விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை வென்றுள்ளார்.



# கால்பந்தின் கறுப்பு முத்து



கால்பந்து வரலாற்றில் கறுப்பு முத்து, கருஞ்சிறுத்தை என்றழைக்கப்பட்டவர் போர்த்துக்கல் கால்பந்து அணியின் முன்னாள் வீரர் யூசெபியோ.

இவர் 1942 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி தற்போதைய மொஸாம்பிக் நாட்டில் பிறந்தார். தனது 15 ஆவது வயதில் லோரன்கா மார்கஸ் கிளப்பிற்காக விளையாட ஆரம்பித்த யூசெபியோ, 1960 ஆம் ஆண்டு பென்பிகா கிளப்பிற்கு விளையாடத் தேர்வு செய்யப்பட்டார்.

சிறந்த முன்கள ஆட்டக்காரராகத் திகழ்ந்த இவர், எதிரணி வீரர்களிடமிருந்து பந்தைப் பறித்து விரைவாக எடுத்துச் சென்று கோலடிப்பதில் வல்லவர். தனது சிறப்பான ஆட்டத்தால் ஏராளமான கோல்களை அடித்து பென்பிகா கிளப் அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்.




இதனால் 1961 ஆம் ஆண்டு போர்த்துக்கல் தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. 1966 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இவரின் சிறப்பான ஆட்டத்தால் போர்த்துக்கல் அணி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் யூசெபியோ 9 கோல்கள் அடித்து அதிக கோலடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். போர்த்துக்கல் அணிக்காக 64 போட்டிகளில் விளையாடி 41 கோல்கள் அடித்துள்ளார்.

பென்பிகா அணிக்காக 15 ஆண்டுகள் விளையாடிய யூசெபியோ எல்லா நேரங்களிலும் அந்த அணியின் ரொப் ஸ்கோரராகத் திகழ்ந்தார். 11 நொடிகளில் 100 மீற்றர் தூரத்தை ஓடிக்கடக்கும் அசாத்திய திறமை கொண்டவர். 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த வீரர்கள் வரிசையில் 9 ஆவது இடத்தைப் பிடித்தார். 2004 ஆம் ஆண்டு பீலே தேர்வு செய்த 125 வீரர்களில் இவரும் ஒருவர். போர்த்துக்கல் கால்பந்து சங்கத்தால் போர்த்துக்கல்லின் தங்க வீரராகத் தேர்வு செய்யப்பட்டவர்.

கடந்த 50 ஆண்டுகால வரலாற்றில் போர்த்துக்கலின் மிகச்சிறந்த வீரர் என்று பெயரெடுத்தவர். பல்வேறு கிளப்புகளுக்காக 1957 முதல் 1978 வரை விளையாடி 1,137 கோல்கள் அடித்துள்ளார்.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐரோப்பா சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாடிய யூசெபியோ 9 கோல்கள் அடித்து அந்த ஆண்டின் ஐரோப்பாவின் சிறந்த வீரர் விருதை வென்றார். 3 முறை ஐரோப்பாவின் சிறந்த வீரர் விருது, இரண்டு முறை தங்க ஷூ விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளை வென்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசிய தொழிலாளர்களை இலக்கு வைக்கும் பிரிட்டனின் புதிய குடியேற்ற விதிகள்

உலக வலம்

ச.துஷ்யந்தினி

குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பிரிட்டனால் இவ்வார நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விதிகள் தெற்காசிய குடியேற்றவாசிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை தோற்று வித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் தவிர்ந்த ஏனைய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களை பிரிட்டனுக்குள் உள்வாங்குவது தொடர்பில் புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பை வெளியிட்ட அந்நாட்டு உள்துறை அமைச்சர் தெரேசா மே வெளிநாட்டுத் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தும் இடைக்கால ஏற்பாட்டு விதிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருமெனத் தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத அதி திறன்வாய்ந்த தொழிலாளர்கள் பிரிட்டனில் வேலைவாய்ப்பைப் பெறமுடியாத சூழ் நிலையில் ஏற்பட்டுள்ளது. ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கன்சவேடிவ் மற்றும் லிபரல் ஜனநாயகக் கட்சிகளுக்கிடையில் ஏற்பட்ட இணக்கப்பாட்டின் ஒரு அங்கமாகவே இப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தொழில் நிமித்தம் பிரிட்டனுக்குள் உள்வாங்கப்படும் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத குடியேற்றவாசிகளின் மொத்த எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் அடுத்த ஏப்ரல் வரையான காலகட்டத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சாராத நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குள் 24,100 பேர் மட்டுமே உள்வாங்கப்படுவார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

2008 இல் தொழில் நிமித்தம் பிரிட்டனுக்குள் உள்வாங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 63 ஆயிரமாக இருக்கும் நிலையில் இதனை மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்க புதிய அரசு விரும்புகிறது.

வர்த்தக நிறுவனங்களும் பொதுச் சுகாதார துறையைச் சேர்ந்தவர்களும் புதிய கொள்கை குறித்து அச்சம் தெரிவித்துள்ளனர்.


ஏனெனில் கடந்த மாதம் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக பிரிட்டனின் தேசிய சுகாதார சேவைகள் துறை இந்தியாவிலிருந்து மருத்துவர்களை உள்வாங்கும் பணிகள் ஆரம்பித்திருந்தது.

ஆனால் குடியேற்ற விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளதன் காரணமாக பிரிட்டனில் ஏற்கனவே பணிபுரியும் பல இந்திய மருத்துவர்கள் தமது சொந்த நாடுகளுக்கு திரும்பத் தொடங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடியேற்றத்தால் சில நன்மைகளைப் பெற முடிகின்ற போதிலும் கட்டுப்பாடற்ற குடியேற்றத்தால் அவற்றைப் பெறமுடியாதெனத் தெரிவித்துள்ள தெரேசா மே வலுவான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக அதிதிறன் வாய்ந்தவர்களை கவருவதை தான் அங்கீகரிப்பதாகக் கூறியுள்ளார்.

தற்போது இருப்பதைப்போல் இலட்சக்கணக்கிலின்றி 1990 ஆம் ஆண்டில் இருந்ததைப் போல் ஆயிரக்கணக்கிற்கு மொத்த குடியேற்ற மட்டத்தைக் குறைப்பதே புதிய குடியேற்ற விதிகளின் இலக்காகும்.

இவ் இலக்கை அடைவதற்கு ஐரோப்பாவுக்கு வெளியிலிருந்து தொழிலுக்காக பிரிட்டனுக்குள் நுழைபவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது அரசாங்கம் திட்டமிட்டுள்ள வழிமுறைகளில் ஒன்றெனத் தெரிவிக்கப்படுகிறது.




அடுத்துவரும் மூன்று மாத காலப்பகுதியில் பிரிட்டிஷ் வர்த்தக சமூகத்துடன் மேற்கொள்ளப்படவுள்ள கலந்தாலோசனையின் பின்னரே இப் புதிய கட்டுப்பாட்டு விதிகள் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடுப்பகுதி வரை அரசுக்கும் வர்த்தக சமூகத்திற்குமிடையிலான பேச்சுக்கள் நடைபெற்று அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் எடுக்கப்படும் இறுதி தீர்மானம் அடுத்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, பொருளாதார ரீதியான தாக்கங்களைக் கருத்திற் கொண்டு பிரிட்டனுக்குள் உள்வாங்கக் கூடிய தொழிலாளர்களின் உச்ச வரம்பும் எல்லை தொடர்பில் ஆலோசனை செய்யுமாறு குடிவரவு ஆலோசனைக் குழுவிடம் உள்துறை அமைச்சர் கோரியுள்ளார்.

அளவுகடந்த குடிவரவின் மூலம் பொதுச் சேவைகளில் ஏற்றுக் கொள்ள முடியாத அழுத்தங்கள் ஏற்படுமென அந்நாட்டு அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கடுமையான புதிய நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை நடத்தும் அதேவேளை குடிவரவுக்காக வந்து குவியும் விண்ணப்பங்களைத் தவிர்ப்பதற்கும் தொழில் விசாக்களை 2009 ஆம் ஆண்டு மட்டத்தில் பேணுவதற்கும் தற்காலிக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாக தெரேசா மே தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரமே குடிவரவு விண்ணப்பங்களின் தொகையைக் குறைப்பதற்கு எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் அரசாங்கம் இடைக்கால நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளது.

ஏற்கனவே பிரிட்டிஷ் பிரஜைகளை திருமணம் புரிபவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் போன்ற விதிகளை அறிமுகப்படுத்தியுள்ள அரசாங்கம் தற்போது தொழில் ரீதியில் உள்வாங்கப்படுவோரின் எண்ணிக்கையையும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் பின்னணியில் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் மேலும் பல வழிமுறைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் கையாளப்போகின்றது என்பது தெளிவாகியுள்ளது.

பிரிட்டிஷ் அரசாங்கம் அமுல்படுத்தவுள்ள இப் புதிய விதிகள் தெற்காசிய குடியேற்றவாசிகளையே அதிகளவுக்கு இலக்கு வைத்துள்ள தாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















**இவ்வாரம் கண்ணுக்கு விருந்தளிப்பவர்**
**அனுஷ்கா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, [illegible] 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.